பக்கங்கள்:14 விலை : 30/-

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 10 சனிக்கிழமை 25.12.2021 கதிர் 50

இது ரகசியம் அல்ல!

இப்போதெல்லாம் இலங்கை அரசியலைப் பற்றி எழுத முற்படும் போது, யோகர் சுவாமிகளின் மகா வாக்கியங்களில் ஒன்றைத்தான் அடிக்கடி குறிப்பிட வேண்டியதாக இருக்கின்றது. அது -'எப்பவோ முடிந்த காரியம்' எனும் வாக்கியம்தான். பக்கம்02

# அரசை எதிர்த்தால் சிறைக்குச் செல்வீர்

## அரச ஊழியர்களுக்கு ஆளும் கட்சி மிரட்டல்



கொழும்பு, டிசெம்பர் 25

அரச ஊழியர்கள் அரசுக்கு எதிராகப் போராட்டம் செய்தால் சிறைச்சாலை செல்லவேண்டி வரும் என்று ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார். 13

வாசகர்கள், விளம்பரதாரர்கள், விநியோகஸ்தர்கள், முகவர்கள் அனைவருக்கும் 'காலைக்கதிர்' நாளிதழின் இனிய நத்தார் தின வாழ்த்துக்கள்.

## 20 பேர் சாவு!

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 20 பேர் சாவடைந்துள்ளனர் என்று அரசதகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 12 ஆண்களும், 8 பெண்களும் உள்ளடங்குகின்றனர்

இதன்படி நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 852 ஆக அதிகரித்துள்ளது.

## அரசின் சலுகைக்காகவே படம் காட்டுகின்றது சு.க.

### போட்டுத் தாக்குகின்றார் எஸ்.பி.

அரசிடமிருந்து மேலதிக சலுகைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே 'புதிய கூட்டணி' கதையை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கட்டவிழ்த்துவிட்டுள்ளது. இதனை நகைச்சுவை கதையாகவே நான் பார்க்கின்றேன்.

- இவ்வாறு ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க 13

## மூங்கிலாறு சிறுமி மரணம்; தாய், தந்தை, சகோதரி கைது

### வெளிவந்தன திடுக்கிடும் தகவல்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தின் மூங்கிலாறு கிராமத்தை சேர்ந்த 13 வயது சிறுமி யோகராசா நிதர்சனாவின் மரணம் தொடர்பில் விசாரணைகளின் போது, சிறுமியின் தந்தையார் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில், பல திடுக்கிடும் தகவல்கள் வெளிவந்தன.

இந்நிலையில், குறித்த சிறுமியின் தாய், தந்தை அவருடைய சகோதரி 13

## தமிழ் பேசும் கட்சிகளின் கூட்டத்தில் பங்கேற்க இ.தொ.காவுக்கும் அழைப்பு



தமிழ் பேசும் கட்சிகளின் பங்களிப்புடன் நடைபெறும் கூட்டத்தில் பங்கேற்குமாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என அக்கட்சி வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது என இணையத்தளம் ஒன்று நேற்றிரவு செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவராலேயே இதற்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்காகத் 13

## ஊடகவியலாளருக்கு மரண அச்சுறுத்தல்!



கொட்டகலை பிரதேச சபையின் உபதலைவர் மற்றும் அவரது குடும்பத்தாரால் தனக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என வீரகேசரி ஊடகவியலாளர் சிவலிங்கம் சிவகுமாரன் பத்தனை டிம்புள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைச் செய்துள்ளார்.

கொட்டகலையில் 13

## மாவட்ட செயலகத்தை முற்றுகையிட்டு யாழ்ப்பாணத்தில் மீனவர்கள் போராட்டம்



(ந.லோகதயாளன், இ.கலையமுதன், எஸ்.நிதர்ஷன்)

இந்திய இழுவைப்படகு மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் உட்பட பல்வேறு மீனவ அமைப்புக்களின் ஏற்பாட்டில் நேற்று யாழ். மாவட்ட செயலகம் 2

## வடக்கு மீனவர்களை அழிக்க அமைச்சர் டக்ளஸும் உடந்தை

### கஜேந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு



வடக்கில் கரையோர மீனவர்களை முற்றாக அகற்ற வேண்டும் என்று தமிழ் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா சிங்கள அரசின் கீழ் வேலை செய்கின்றார்.

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 13

தென்னாடு

சிவ சிவ
திருச்சிற்றம்பலம்

மார்கழிப் பெருவிழா - 2021

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமும், சைவ மாணவர் சபையும் இணைந்து நடாத்தும் மார்கழிப் பெருவிழா இம்முறை சிலை நல்லோரை மார்கழித் திங்கள் 10ம் நாள் சனிக்கிழமை மற்றும் 11ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (டிசம்பர் 25 மற்றும் 26) திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடாத்த திருவருள் கைகூடியுள்ளது.

காலம் - மார்கழித் திங்கள் 10ம் நாள் 11ம் நாள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை (டிசெம்பர் 25 மற்றும் 26)
இடம் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - சபாலிங்கம் அரங்கம்

தீநுண்மி பெருந்தொற்றுப் பரவல் ஒழுங்குகளால் குறிப்பிட்ட இருக்கைகள் மட்டுமே உள்ளமையால் பங்குபற்ற விரும்பும் அடியவர்கள் தென்னாடு மடத்தில் முன்பதிவு செய்து கொள்ளுங்கள். முன்பதிவு செய்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 021 221 2739 075 653 3111

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ்க் கட்சிகளுடன் ஐக்கியப்படலை எட்டமுன்னர், மனோ கணேசன், ஹக்கீம் போன்றோரை கலந்துரையாடலுக்கு ரெலோ அழைத்தபோதே சில சிக்கல்கள் வரும் என நான் எதிர்பார்த்தேன்.

கடந்த முப்பத்தியைந்து, நாற்பது வருடங்களாக இதே பாணியில் நடக்கும் பல சமரசக் கூட்டங்கள், சந்திப்புகள், பேச்சுகள், மாநாடுகள் போன்றவற்றில் பக்கத்திலிருந்து செய்தி சேகரித்த அனுபவம் எனக்குத் தாராளமாகவுண்டு. அதுவும் குறிப்பாக, தமிழீழ விடுதலைப் புலிகள், திம்புவுக்குப் பிறகு இலங்கை அரசுகளுடன், யாழ்ப்பாணம், கொழும்பு, ஆறு நாடுகள் மற்றும் ஜெனிவா என்று பல இடங்களிலும் நடத்திய சமரசப் பேச்சுகளில் பக்கத்தில் இருந்து செய்தி சேகரித்தவர்களுள் மிஞ்சி இருக்கக் கூடிய ஓரிருவரில் நான் முக்கியமானவன். எந்தக் கட்டத்திலும், எந்தப் பிரச்சினையை புதிதாகஉள்நுழைத்து, எல்லாவற்றையும் போட்டடிப்பார்கள் என்பதை சரியாக ஊகிப்பது கூட எமது அனுபவத்துக்கு சவால் விடும் விடயம்தான்.

அதுவும் ரணிலின் அரசு தாய்லாந்து, ஜப்பான், நோர்வே, ஜேர்மன் என்று பல நாடுகளில் புலிகளின் பிரதிநிதிகள் குழுவோடு பேச்சு நடத்திய போது அரசுத் தரப்பின் பங்காளியாகப் பங்கு கொண்டவர் ஹக்கீம். 'ஹக்கீமுக்கு பாலசிங்கம் கொடுத்த சூடு' என்ற தலைப்பில் ஒரு விரிவான செய்தி எழுதிய நினைவு கூட உண்டு.

தமிழ்த் தரப்புகளுக்குள் ஓர் இணக்கம் எட்டப்பட முன்னரே மனோ கணேசன், ஹக்கீம் போன்றோரை ரெலோ உள்நுழைக்கின்றதே, நெருக்கடிகளை உருவாக்க ஆரம்பத்திலேயே வெற்றிலை வைக்கின்றார்கள் என்று என் மனதுக்குப் பட்டது. என் ஆசிரிய பீட சகாக்களிடமும் அதனைக் கூறினேன்.

பெரும்பாலும் முஸ்லிம் தரப்பிலிருந்து, வடக்கு – கிழக்கு இணைப்பு என்ற சர்ச்சையை ஒட்டி குழப்பம் ஆரம்பிக்கும் என நான் எதிர்பார்த்தேன்.

ஆனால், ஆரம்பம் மலையகப் பக்கத்திலிருந்து – மனோ கணேசன் தரப்பிலிருந்து – கிளம்பியிருக்கின்றது. அவருக்குள்ள நெருக்கடி புரிந்து கொள்ளக் கூடிய இக்கட்டுத்தான். மலையக மக்களின் தலைவராக மட்டுமல்லாமல், வடக்கு – கிழக்கு வெளியேயுள்ள வடக்கு, கிழக்குத் தமிழர்களின் வாக்குகளைத் தேர்தலில் திரட்டுவதற்கு மற்றைய தமிழ்த் கட்சிகள் தவறியுள்ள நிலையில், அந்த வெற்றிடத்தை தமக்குரியதாக அவர் 'புரொஜெக்ட்' பண்ணி முன்னிலைப்படுத்தியும் வருகின்றார். அதை மற்றைய தமிழ்க் கட்சிகள், தரப்புகள் பலவும் இன்னும் தேர்தல் அரசியலில் சவாலுக்கு உள்ளாக்காமையால் அவருக்கு அந்த பிரதிநிதித்துவ உரிமை சித்தித்தே வருகின்றது.

இப்போதைய சமரசப் பேச்சுகள், ஊடாட்டங்கள் அவருக்குப் புதிய அரசியல் சவாலைத் தந்திருப்பது கண்கூடு.

அவருடைய கூட்டில் உள்ள பிற பங்காளிக் கட்சிகளும் சரி, எதிர்த் தரப்பில் இருக்கும் இ.தொ.கா. போன்றவையும் சரி, அவரைப் போல இரு தோணியில் கால் வைத்தவை அல்ல. அவை பெரும்பாலும் தனித்து மலையக – இந்திய வம்சாவளி – மக்களையும் வாக்காளர்களையும் மட்டுமே இலக்கு வைத்து அரசியல் செய்பவை. ஆனால் மனோ கணேசனின் நிலைமை அப்படி அல்ல. வடக்கு, கிழக்குக்கு வெளியே – கொழும்பிலும் பிற இடங்களிலும் – வசிக்கும் வடக்கு, கிழக்குத் தமிழர்களையும் இலக்காகக் கொண்டு அவர் அரசியல் செய்பவர். அதுவும் மகேஸ்வரன் போன்றோர் களத்தில் இல்லாத நிலையில்–தமிழ்க்கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போன்றவை தெற்கில் தேர்தல் அரசியல் செய்யாத நிலையில் – அவர் அந்த சாதக சூழலை தமக்கானதாக மாற்றிக் கொண்டவர்.

இப்போது, இப்படித் தாம் குரல் எழுப்பும் இரண்டு தரப்புகளுக்கும் இடையில் அரசியல் 'பலன்ஸிங்' செய்ய வேண்டிய கட்டாயம் அவருக்கு வந்திருக்கின்றது.

"மூன்று நாள்களுக்கு முன்னர் பகிரங்கக் கலந்துரையாடலில் ஒப்புக்கொண்டு வந்த விடயத்தில் இப்போது பின்னடிக்கின்றார் மனோ'' – என்று அவரின் பங்காளிக் கட்சித் தலைவர் ஒருவரே அவரது கட்சியின் மூத்த பிரமுகர் ஒருவருக்குக் கூறினார் என நம்பகரமாக நான் அறிந்தேன். அவர்களுக்கு மனோ கணேசனின் அரசியல் நெருக்கடி புரியாது.

போதாக்குறைக்கு நான் ஏற்கனவே சொன்னபடி இ.தொ.கா. தலைவர் ஜீவன் தொண்டமானும் விடயத்துக்குள் வந்து விட்டார்.

நேற்று முற்பகல் சௌமியமூர்த்தி பவனில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் – சுமந்திரன் சந்திப்பு நடந்தது. கடந்த செவ்வாயன்று தமிழ்க் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தயாரிக்கப்பட்ட வரைவு பற்றிய முழு விளக்கத்தையும் சுமந்திரன், ஜீவன் தொண்டமானுக்கு வழங்கினார். அவற்றைக் கிரகித்து உள்வாங்கிக் கொண்ட ஜீவன், அது குறித்து தமது கட்சியினருடன் பேசி விட்டு வருவார் எனப் பதிலளித்திருக்கின்றார். அதற்குப் பிறகு எனக்குக் கிடைத்த தகவல்கள் இந்த வரைவில் ஒப்பமிடுவதற்கு இ.தொ.கா. தலைவர் ஜீவன் தயாராகி விட்டார் என்பதாக இருந்தன.

சுமந்திரன் – ஜீவன்தொண்டான் சந்திப்பு உணர்வுபூர்வமாக இருந்தது.

சுமந்திரனை வரவேற்ற ஜீவன் தொண்டமான், அவரைத் தனது தந்தையின் (ஆறுமுகம் தொண்டமானின்) பாடசாலை நண்பர் என்று அங்கிருந்த இ.தொ.காவின் மூத்த உறுப்பினர்களுக்கு அறிமுகப்படுத்தினர். ஆனால் அவர்கள் குறுக்கிட்டனர்.

"இல்லைத் தம்பி, உங்கள் பூட்டனாரின் (சௌமியமூர்த்தி தொண்டமானின்) தனிப்பட்ட வழக்குகளை கையாளும் சட்டத்தரணி இவர். உங்கள் பூட்டனார் இவரைத்தேடிச்சென்றுசந்தித்துவழக்குகளை கையளிப்பது உண்டு" – என்று அவர்கள் ஜீவனுக்குத் தெளிவுபடுத்தினார்.

சுமந்திரனும் தன் பங்குக்குத் தமது தமிழரசுக் கட்சி குறித்து ஜீவனுக்கு எடுத்துரைத்தார்.

"மலையக மக்களின் – நமது சகோதர்களின் – குடியுரிமை பறிக்கப்பட்ட போது, அந்த விடயத்தை மையமாக வைத்துத்தான் தமிழரசுக் கட்சியே ஸ்தாபிக்கப்பட்டது" – என்ற விடயத்தை சுமந்திரன் விவரித்த போது ஜீவன் தொண்டமன் நெகிழ்ந்து போனார். சுமந்திரனின் கையைப் பற்றி அந்த உறவை நாம் பலமாகத் தொடர வேண்டும் என்றார் ஜீவன்.

இப்போது வடக்கு, கிழக்குத் தமிழர் தரப்போடு சேர்ந்து பணியாற்ற ஜீவன் தொண்டமான் தலைமையிலான இ.தொ.கா., முன்வருவது போல எழுபதுகளின் நடுப்பகுதியில் – அன்றைய காலக் கட்டாயத்தின் அடிப்படையில் – தமிழர் தரப்புகள், தமிழர் விடுதலைக் கூட்டணியாக உருவெடுத்த போது, அதில் முதல் பங்காளியாக நின்றவர் உங்கள் பூட்டனார் சௌமியமூர்த்தி தொண்டமான் என்பதை சுமந்திரன் நினைவூட்டி தெளிவுபடுத்தியமை ஜீவனின் மனதை மேலும் நெருடியது.

ஆக, ரெலோ ஆரம்பித்த இந்த சமரச முயற்சி, தமிழரசு – இ.தொ.கா. உறவுக்கும் நெருக்கத்துக்கும் வழி திறந்து விட்டிருப்பது கண்கூடு.

இவற்றை எல்லாம் கவனத்தில் எடுத்து அனுசரித்துத்தான், தமிழ்ப் பேசும் தரப்புகளின் ஏகோபித்த கோரிக்கையில் மலையக மக்களின் தனித்துவ நிலைப்பாட்டையும் உள்செலுத்த வேண்டும் என்ற தனது கோரிக்கையை வலியுறுத்தும் போக்கை மனோ கணேசன் தீர்மானிக்க வேண்டும்.

ஒரு புறம் – இந்திய வம்சாவளி மலையக மக்கள். மறுபுறம் – வடக்கு, கிழக்கிற்கு வெளியே வதியும் வடக்கு – கிழக்கு வாக்காளர்கள். ஒருவரையும் நோகாமல் தன் நிலைப்பாட்டை மனோ கணேசன் எடுத்துச் செல்ல வேண்டும். அதே நேரம் தமிழ்ப் பேசும் மக்களின் சார்பில் ஒருமித்த நிலைப்பாட்டைக் கட்சித் தலைவர்கள் எடுப்பதற்கு மனோ கணேசனின் நிலைப்பாடே குந்தகமாக வந்தது என்ற கருத்து வெளிவராமலும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

வெகு சிக்கலான இக்கட்டு. எப்படிக் காய் நகர்த்தப் போகின்றார் மனோ கணேசன்? பொறுத்திருந்து பார்ப்போம்.

– மின்னல் –

## மாவட்ட செயலக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முற்றுகையிடப்பட்டு மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றுக் காலை 9.30 மணியளவில் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளன முன்றிலில் இருந்து கடற்றொழிலாளர்களால் ஆரம்பிக்கப்பட்ட பேரணி யாழ். மாவட்ட செயலக முன்றிலில் நிறைவடைந்தது.

அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களைக் கைது செய், கைது செய்த படகுகளை விடக்கூடாது, எமது வாழ்வாதாரத்தை அழிக்காதே போன்ற பல்வேறு கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இந்தப் போராட்டம் காரணமாக ஏ – 9 வீதி மற்றும் யாழ். மாவட்ட செயலகம் சில மணிநேரம் முடங்கியிருந்ததுடன் வீதியூடான போக்குவரத்தும் முடங்கியது.

இதையடுத்து போராட்ட இடத்துக்கு வருகை தந்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தான் இது தொடர்பாக ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேசித் தீர்வைப் பெற்றுத் தருவதாக வாக்குறுதியளித்ததை அடுத்து தாங்கள் போராட்டத்தை கைவிடுவதாகக் கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622






# குவைத்தில் இலங்கையருக்கு மரண தண்டனை வெளியான தகவல்களில் எந்த உண்மையுமில்லை

## வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 25

குவைத்தில் வாழும் இலங்கையர் தொடர்பில் சமூக வலைத்தளம் ஊடாக வெளியாகிய தகவல் போலியானதென வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கிறிஷ்னன் சிறியானி சந்திரலத்தா என்ற பெண்ணுக்கு குவைத் நாட்டில் மரண தண்டனை விதிக்க ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என சமூக வலைத்தளங்களில் வீடியோக்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் குவைத் தூதரகம் கடந்த 21 ஆம் திகதி குவைத் அதிகாரிகளிடம் முறைப்பாடு ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அதற்கமைய குவைத் பொலிஸாரின் ஆதரவுடன் தூதரக அதிகாரிகளால் குறித்த பெண் பணியிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டார். கடந்த 22 ஆம் திகதி அந்தப் பெண் தூதரகத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளார் என வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

தொழில் வழங்குநர்களால் அந்தப் பெண்ணின் இலங்கை பயணத்தை தாமதப்படுத்துவதால் மீண்டும் இலங்கை வர வேண்டும் என்ற நோக்கில் பெண் தனது பிள்ளைகளுக்கு பிழையான தகவல்களை வழங்கியுள்ளார் எனத் தெரியவந்துள்ளதென வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்தப் பெண் மீண்டும் இலங்கைக்கு வருவதற்காக குவைத் தூதரகத்தால் உதவிகள் செய்யப்படுகின்றன என வெளிவிகார அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




## அடுத்த வருடம் உணவுப் பஞ்சம் ஏற்படும் அரச அமைச்சர் மஹிந்த அமரவீர ஆரூடம்!

இலங்கையில் அடுத்த வருடம் உணவுப் பஞ்சம் ஒன்று ஏற்படும் என சுற்றுச்சூழல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. அது எங்கள் அனைவருக்கும் தெரிந்த விடயமே என அவர் குறிப்பிட்டுள்ளார். நிச்சயமாக அடுத்த வருடம் உணவு பஞ்சம் ஒன்றுக்கு முகம் கொடுக்க நேரிடும் என அவர் கூறியுள்ளார். இதனால் நாங்கள் மகா பருவம் ஒன்றை ஆரம்பித்து அனைவரும் முன்வர வேண்டிய காலம் ஏற்பட்டுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார். ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டபோதே அமைச்சர் மஹிந்த அமரவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே நாட்டில் பஞ்சம் ஏற்படாது என்று ஊடகங்களிடம் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.









காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இறைத்தூதருக்குக் காத்திருக்கிறோம்

பெருந்தொற்றுக்கு மத்தியிலும் உலகம் இன்றைய தினத்தை உற்சாகத்தோடு கொண்டாடுகின்றது.

ஆம், இன்று இறைதூதர் – சமாதானப் பிரபு – தேவ குமாரன் – இயேசு பிறந்த நாள். கிறிஸ்மஸ் தினம். இத்தினத்தை உலகெங்கும் பரந்து வாழும் மக்கள் மகிழ்வோடு கொண்டாடுகின்றார்கள்.

“பாவப்பட்ட மக்களை மீட்டெடுக்க இறைவனின் திருமகன் இந்த மண்ணுலகில் மகனாகப் பிறப்பார்” என்கின்றது வேதவசனம்.

உலகை மீட்கத் தன் மகனை மனிதனாக – இறைதூதராக – அனுப்புகின்றார் ஆண்டவன்.

அந்த மானுட குமரன் பிறந்த நாளில் மனுக்குலத்திற்கு ஒளி கிடைத்தது என்பர்.

இயேசுவின் வருகை பேரொளி பிரகாசத்தின் வருகை. அதனால் இத்தினத்தை ஒளிவிழாவாக நாம் கொண்டாடுகின்றோம்.

“இயேசு ஒளியாக உலகிற்கு வந்தார். அனைத்து மனிதர்களுக்கும் ஒளி தரும் உண்மையான ஒளி உலகுக்கு வந்து கொண்டிருந்தது”(யோவான்1:9) என யோவான் நற்செய்தியாளர் இயேசுவை அறிமுகம் செய்கின்றார்.

மனிதம் மாண்புற இறைவன் மனிதரானார். இயேசு என்பது சிந்தனையை ஊடுருவும் கருத்து. மானுடம் – மனிதத்துவம் – உயர்வாகப் பேணப்பட்டு, காக்கப்படுவதில்தான் மானுட விடுதலை தங்கியுள்ளது என்பதைப் போதித்தும் வாழ்ந்தும் காட்டினார் இயேசு.

அன்பு, நீதி, சமத்துவம், சகோதரத்துவம், பகிர்வு, மன்னிப்பு, அரவணைப்பு, பிறருக்காகவும் ஏங்குதல் என்ற மனித மாண்புகளைப் போதித்தார் மனுக்குல இரட்சகர்.

அதுவரையில் காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்ட நாளாக அமைவதுதான் உலகை இறைமகன் நாடி வந்த தினமும். நமது மனித குலத்தில் சாவின் நிழல் சூழ்ந்த மக்களுக்கு முதன் முதலாக சுடர் ஒளி வழங்கித் தன் பேரருள் பிரகாசத்தால் ஆசீர்வதிக்க – ஆகர்ஷிக்க – சமாதான குமரன் பூவுலகுக்கு வந்தார்.

உலகைப் பேரொளி பற்றிப் பீடித்த இந்தத் தினத்திலும், இன்னும் துவண்டு, சுருண்டு கிடக்கும் ஈழத் தமிழர்கள் வாழ்வில் மனதில் சஞ்சலத்தை ஏற்படுத்தும் பல ஐயங்கள் தொடரவே செய்கின்றன.

உலகை மீட்க வந்த இறைத்தூதர் தமிழ் மக்களை பௌத்த, சிங்களப் பேரினவாத அட்டூழிய, ஆக்கிரமிப்பு இருளிலிருந்து எப்போது மீட்பார்?

தேவகுமாரனின் பிறப்பை சமாதானத் தூதரின் வருகை என்கிறோம். தம் வருகை மூலம் குழந்தை இயேசு இந்தப் பூமிப் பந்தில் நிலைநிறுத்திய உண்மை, சமாதானம் ஈழத் தமிழர்களுக்கு கிட்டுவது எப்போது?

இயேசுவின் வருகையோடு ‘நல்மனம் கொண்டோர் அனைவருக்கும் அமைதி’ என்ற வாழ்த்தும் வானவரின் பாடலாக ஒலித்தது என்பர்.

அந்த அமைதியும், நீதியும், நியாயமும் இத்துணை தசாப்தங்கள் கடந்தும் ஈழத் தமிழர்களுக்குக் கிட்டவேயில்லை. அப்படியாயின் ஈழத் தமிழர்கள் ‘நல்மனம் கொண்டோர்’ என்ற மக்கள் கூட்டத்தில் அடங்கவில்லையா?

“நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாக இருக்கிறேன். நானே உலகின் ஒளியாகவும் இருக்கிறேன். நானே நல்மேய்ப்பன். நானே உயிர்களுக்கெல்லாம் ஜீவனுமாக இருக்கிறேன். வருத்தப்பட்டு பாரம் சுமப்பவர்களே! எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாற்றுதல் தருகிறேன்” என்றார் இயேசுபிரான்.

பேரினவாதத்தின் அடக்குமுறை அட்டகாசத்தில் – ஈவிரக்கமற்ற கொடூரத்தில் – தனது தனித்துவத்தை, சுதந்திரத்தை, வாழ்வியல் அடையாளங்களைப் பறி கொடுத்துத் தடுமாறித் துவண்டு நிற்கும் தமிழினத்துக்கு நல்லொளி மீட்டு, நீதியையும் சமாதானத்தையும் அமைதியையும் பெற்றுக் கொடுக்க சமாதானத் தூதர் – ஒளிப்பிரபு –இறைமகன் – மீண்டும் ஒரு தடவை வரவேண்டும். அவருக்காக ஏக்கத்துடன் காத்திருக்கின்றோம்.

# புதிய கற்றல் முறைகள் பிள்ளைகளுக்குத் தேவை

### அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு



புதிய கற்றல் முறைகளை பிள்ளைகளுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்று வெகுஜன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியை வெற்றி கொள்வதற்கு சகலரும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டுமென்றும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

மாத்தறை மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் அமைச்சர் பங்கேற்றார். புதிய கற்றல் முறைகளை பிள்ளைகளுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்று அந்த நிகழ்வில் உரையாற்றும் போது அவர் கூறினார்.

அறிவு மற்றும் தரவுகளுடன் விடயங்களைத் தீர்மானிக்கும் யுகம் தற்போது உருவாகியுள்ளது. மாற்றமடையும் உலகிற்கேற்ப கல்வி முறையிலும் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டுமென்றும் அமைச்சர் கூறினார்.

இதேவேளை,மக்களை ஜீவனோபாய ரீதியில் பாதுகாக்கும் வேலைத்திட்டத்தை அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுக்கும் என்றும் அவர் கூறினார். கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டம் சம்பந்தமாக கம்புறுப்பிட்டிய பிரதேச செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்ற போதே அமைச்சர் டலஸ் அழகப்பெரும இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

# எரிபொருள்கள் விலையேற்றம் தீப்பந்தம் ஏந்தி ஆர்ப்பாட்டம்



எரிபொருள் விலையேற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தி அங்கத்தவர்கள் கையில் தீப்பந்தம் ஏந்தி ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் கினிகத்தேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கினிகத்தேனை நகரில் கடந்த வியாழக்கிழமை இரவு சுமார் 7 மணி அளவில் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசாங்கம் எரிபொருளின் விலையை உடன் குறைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியே கையில் தீப்பந்தம் ஏந்திய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பிரதேசத்தில் உள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

# எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் 3,000 கோழிக் குஞ்சுகள் தீக்கிரை!



பன்னல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பல்லேகம எலிபிச்சிய பிரதேசத்தில் உள்ள கோழிப்பண்ணை ஒன்றில் எரிவாயுக் கசிவு காரணமாக தீ விபத்தொன்று ஏற்பட்டுள்ளது.

நேற்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை 3.20 மணியளவில் எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் ஏற்பட்ட தீ விபத்தால் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட கோழிக் குஞ்சுகள் உயிரிழந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

நீர்கொழும்பு பகுதியில் வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமான 17 ஏக்கர் காணியில் கோழிப் பண்ணை அமைந்துள்ளது. குறித்த கோழிப்பண்ணையில் சுமார் 35 ஆயிரம் கோழிக் குஞ்சுகளை அடைக்கக்கூடிய ஏழு கூடங்கள் உள்ளன. அதில் ஒரு கூடத்தில் தீப்பிடித்துள்ளது.

கோழி குஞ்சுகளுக்குத் தேவையான வெப்பத்தை ஏற்படுத்த 37.5 கிலோகிராம் எடையுள்ள மூன்று எரிவாயு சிலிண்டர்கள் பொருத்தப்பட்டிருந்த நிலையில், அதில் ஒரு சிலிண்டரில் ஏற்பட்ட கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

எவ்வாறாயினும் நீர்கொழும்பு மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினரும் பொலிஸாரும் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளமையுடன் சேத விவரங்கள் இதுவரை கணக்கிடப்படவில்லை.

பன்னல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கௌதாரிமுனை கணேசா ஆலயத்தில் யாழ். பல்கலையும் ஆய்வில் ஈடுபாடு!

### தொல்லியல் திணைக்களத்துடன் இணைந்து

பூநகரி கௌதாரிமுனையில் உள்ள கணேசா ஆலயத்தில் தொல்லியல் திணைக்களத்துடன் இணைந்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினர் ஆய்வில் ஈடுபட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வரலாற்று தொன்மை வாய்ந்த கௌதாரி முனை கணேசா ஆலயம் தொல்லியல் திணைக்களத்தால் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆலயத்தில் வரலாற்று தொன்மையான சான்றுகள் இருக்கக் கூடும் என்ற ரீதியிலேயே இந்த ஆய்வுப் பணிகள் இடம்பெறுகின்றன.

யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத் துறை ஓய்வுநிலை பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம் தலைமையில் யாழ். பல்கலைக்கழக தொல்லியல் துறை நான்காம் வருட மாணவர்களே ஆலய வளாக பகுதிகளில் அகழ்வு ஆராச்சியில் தொல்லியல் திணைக்களத்துடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

தொல்லியல் திணைக்களத்தினுடைய புனர்நிர்மாணங்களுக்குப் பொறுப்பான பிரதிப்பணிப்பாளர் வரணி ஜெயத்திலக கலந்து கொண்டு குறித்த அகழ்வை மேற்கொண்டு வருகின்றனர்.

# கிரானில் அதிசக்தி வாய்ந்த பீரங்கி குண்டு கண்டுபிடிப்பு

கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள தொப்பிகல, மீயாங்கொல்ல காட்டுப் பகுதியிலிருந்து அதிசக்தி வாய்ந்த 130 மில்லிமீற்றர் பீரங்கி குண்டு மற்றும் நாட்டுத் துப்பாக்கி என்பன மீட்கப்பட்டுள்ளன.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப்படையினரோடு இணைந்து காகித ஆலை விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் இவை மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்டுள்ளவற்றை செயலிழக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் மேற்கொண்டுள்ளமையுடன், கடந்த சில தினங்களாக இவ்வாறான கைவிடப்பட்ட வெடிபொருள்களை வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் மற்றும் பாதுகாப்புத் தரப்பினரும் மீட்டு செயலிழக்கச் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இந்த மாதம் முதல் 20 நாள்களில் மாத்திரம் 47 ஆயிரத்து 120 சுற்றுலாப் பயணிகள் வருகை

இலங்கைக்கு இம்மாதம் முதல் 20 நாள்களில் மாத்திரம் 47 ஆயிரத்து 120 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகைத் தந்துள்ளனர் என சுற்றுலாத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் மொத்தமாக ஒரு லட்சத்து 52 ஆயிரத்து 109 சுற்றுலாப் பயணிகள் வருகைத் தந்துள்ளனர் எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையை கவர்ச்சிகரமான சுற்றுலாத்தளமாக மேம்படுத்தும் வகையில் ஒருங்கிணைந்த ஊக்குவிப்பு பிரசாரம் எதிர்வரும் ஆண்டு தொடக்கத்தில் ஆரம்பிக்கப்படும் என அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

சமூக ஊடகங்கள், வெளிநாடுகளில் சுற்றுலா மற்றும் விமானப் போக்குவரத்துத் துறை தொடர்பான சர்வதேச மாநாடுகளிலும் இலங்கை ஊக்குவிக்கப்படவுள்ளது.

# இலஞ்சம் வாங்கிய அதிபர் கம்பஹாவில் வைத்து கைது

மாணவன் ஒருவனை பாடசாலையில் சேர்ப்பதற்காக லஞ்சம் பெற முற்பட்ட அதிபர் ஒருவரை லஞ்சம் , ஊழல் குற்றச் சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக் குழு கைது செய்துள்ளது.

கம்பஹாவில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றின் அதிபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த மாணவனை பாடசாலையில் தரம் 7 இல் சேர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிபர் 2 லட்சம் ரூபாவை லஞ்சமாக கோரினார் என மாணவனின் பாதுகாவலர் முறைப்பாடு செய்துள்ளார்.

அதன்படி, அதிபர் அலுவலகத்தில் வைத்து சந்தேக நபரான அதிபரை குறித்த பணத் தொகையை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் விசாரணை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட அதிபர் முதற்கட்ட விசாரணைகளின் பின்னர் கம்பஹா நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

சம்பவம் தொடர்பில் லஞ்சம் , ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

# சதொசவின் நட்டம் குறைவடைந்துள்ளது

லங்கா சதொசவின் நட்டம் குறைந்துள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு 190 கோடியாக இருந்த நட்டத்தை 2021 ஆம் ஆண்டு இறுதிக்குள் 80 கோடி ரூபாவாக குறைக்க லங்கா சதொச நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.




# யானையுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்து; இளைஞன் காயம்

கோமரங்கடவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கஜுவத்த பிரதேசத்திலிருந்து மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞரொருவர் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து கடந்த வியாழக்கிழமை இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் மயிலவெள - புதுபுர பகுதியைச் சேர்ந்த சிவில் பாதுகாப்பு படை வீரரான எஸ்.சமரநாயக்க (வயது - 28) படுகாயமடைந்துள்ளார்.

குறித்த இளைஞர் வயலுக்குச் சென்று வீடு திரும்பிக் கொண்டிருக்கும்போது பிரதான வீதியின் ஊடாக யானை குறுக்கே வந்ததால் மோட்டார் சைக்கிள் யானையுடன் மோதியதாகவும் தெரியவந்துள்ளது.

விபத்தில் காயமடைந்த இளைஞர் தற்பொழுது திருகோணமலை பொது வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணம் மாநகர சபை
## 2022ஆம் ஆண்டுக்கு ஏற்புடையவாறு வீதவரி விதித்தல்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் தத்துவங்களை அமுல்படுத்துவதுடன், பணிகள், செயற்பணிகளை நிறைவேற்றுகின்ற யாழ்ப்பாணம் மாநகர சபையின் கௌரவ முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆகிய நான் யாழ்ப்பாணம் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 286அ பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேற்படி சட்டத்தின் 230(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய யாழ்ப்பாணம் மாநகர சபை அதிகாரப் பிரதேசத்திற்கு 2022 ஆம் ஆண்டிற்கு ஏற்புடையதாக வீதவரி விதிப்பதானது பின்வருமாறு இருத்தல் வேண்டும் என்று தீர்மானிக்கின்றேன். அதாவது, மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 238 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு மாநகர சபைகள் அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள சகல வீடுகள், கட்டடங்கள், காணிகள் மற்றும் நிர்மாணிப்புகளின் வருடாந்த பெறுமதிக்கு 2021 ஆம் ஆண்டுக்கான விலைமதிப்பு/மதிப்பீட்டை 2022 ஆம் ஆண்டிற்கான விலைமதிப்பு / மதிப்பீடாக நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்றும், மேற்படி விலை மதிப்பின் அடிப்படையில் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 286அ ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அக்கட்டளைச் சட்டத்தின் 230(1) பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு மேற்படி ஆதனத்தின் மீது குறித்த மதிப்பீட்டுக்கு வருடாந்தப் பெறுமதியில் எட்டு சதவீதமான (8%) வருடாந்த வீத வரி வெற்றுக்காணிகள் மற்றும் வதிவிடங்களுக்கும், 10 சதவீதமான (10%) வருடாந்த வீத வரியை சகல ஏனைய இடங்களுக்கும் விதிக்கப்படல் வேண்டும் என்றும்,

மேலும், 2022 ஆம் ஆண்டில் பின்வரும் அட்டவணையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு காலாண்டிற்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அவ்வாறு விதிக்கப்படுகின்ற வருடாந்த வீதவரியை யாழ்ப்பாண மாநகரசபையின் நிதியத்திற்குச் செலுத்த வேண்டும் என்றும், அவ்வாறு வருடாந்த வீதவரி 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் முழுமையாக செலுத்தப்படுமாயின், வருடாந்த வீதவரித் தொகையில் நூற்றுக்கு பத்து சதவீதமான (10%) கழிவும், மேற்படி அட்டவணையின் ஒவ்வொரு காலாண்டுக்கும் எதிரே மூன்றாவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் குறித்த வீத வரித் தொகை யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிதியத்திற்குச் செலுத்தப்படுமாயின் குறித்த காலாண்டுக்குரிய தொகையில் ஐந்து சதவீதமான (5%) ஆன கழிவும் யாழ்ப்பாணம் மாநகர சபையினால் வழங்கப்படும் என்றும் சொல்லப்பட்ட காலங்களில் செலுத்தப்படாதவிடத்து வெற்றுக்காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது நூற்றுக்கு பதினைந்து வீதமான (15%) மற்றும் சகல ஏனைய இடங்கள் மீது நூற்றுக்கு இருபது வீதமான (20%) விறாந்துக் கட்டணம் அறவிடப்படும் என்றும் தீர்மானிக்கின்றேன்.

**கௌரவ.விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**முதல்வர்,**
**மாநகரசபை யாழ்ப்பாணம்**

மேற்படி அட்டவணை

| காலாண்டு பெறும் | செலுத்த வேண்டிய திகதி | 5% கழிவுக்கு உரித்துப் இறுதித் திகதி |
|---|---|---|
| முதலாவது காலாண்டு | 01.01.2022 - 31.03. 2022 | 31.01. 2022 |
| இரண்டாவது காலாண்டு | 01.04. 2022 – 30.06. 2022 | 30.04. 2022 |
| மூன்றாவது காலாண்டு | 01.07. 2022 – 30.09. 2022 | 31.07. 2022 |
| நான்காவது காலாண்டு | 01.10. 2022 – 31.12. 2022 | 31.10. 2022 |

குறிப்பு:- 2022 ஆம் ஆண்டிற்கான ஆதனவரி அறிவித்தல்கள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன. 31.01.2022 ஆம் திகதிக்குள் செலுத்துவதன் மூலம் 10% கழிவினையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

# பிரியந்த குமாரவின் இடத்துக்கு மற்றுமொரு இலங்கையர் நியமனம்

பாகிஸ்தானின் சியால்கோட்டில் உள்ள தொழிற்சாலை ஊழியர்களால் நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதலில் கொல்லப்பட்ட பிரியந்த குமாரவுக்குப் பதிலாக வேறொரு இலங்கையரை நியமிக்க அந்நிறுவன நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

இலங்கை உயர்ஸ்தானிகர் வைஸ் அட்மிரல் மொஹான் விஜேவிக்கிரம மற்றும் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானின் மத ஒத்துழைப்புக்கான விசேட தூதுவர் ஹாபிஸ் தாஹிர் மெஹ்மூத் அப்ராபி மற்றும் மதத் தலைவர் மௌலானா தாரிக் ஜமீல் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பின் போது இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரியந்த குமார கடந்த 3ஆம் திகதி தமது மதத்தை அவமதித்தார் எனக் குற்றம் சுமத்தி தொழிற்சாலை ஊழியர்களால் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் தாக்கியதில் காயமடைந்தவர் வைத்தியசாலையில சேர்ப்பு!

விடுமுறையிலிருந்த மட்டக்களப்பு மாநகரசபையில் கடமையாற்றிவரும் காரியாலய உதவியாளரை காரியாலயத்துக்கு வரவழைத்து அவர் மீது மாநகரசபை ஆணையாளர் தாக்குதல் மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வியாழக்கிழமை மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின் போது காயமடைந்தவர் சிகிச்சைகளுக்காக வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாநகரசபையில் காரியாலய உதவியாளராகக் கடமையாற்றிவரும் ஜனார்த்தன் வியாழக்கிழமை விடுமுறையில் வீட்டில் இருந்துள்ளார்.

இந்த நிலையில் மாலை 5.30 மணிக்கு மாநகரசபை ஆணையாளர் காரியாலயத்துக்கு வருமாறு அழைத்தமையையடுத்து அவர் அங்கு சென்றுள்ளார்.

காரியாலயத்தில் ஆணையாளர் தலைமையில் ஒரு திட்டமிடல் கூட்டம் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது அங்குசென்ற காரியாலய உதவியாளரிடம் "நீ என்ன மக்களிடம் பணம் பெற்றுக்கொள்கின்றாயா?" என ஆணையாளர் கேட்டுள்ளார்.

இதன்போது அவர் தாம் அப்படி வாங்கவில்லை எனவும், முடிந்தால் பணம் பெற்றுக்கொண்டமையை நிரூபிக்குமாறும் கோரியுள்ளார்.

இதனையடுத்து காரியாலய உதவியாளரின் மீது ஆணையாளர் தாக்குதல் மேற்கொண்டமையுடன், அவர் அணிந்திருந்த ரீசேட்டை கிழித்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இதன்போது காயமடைந்த உதவியாளர் மட்டு.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார் என பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

அதேவேளை காரியாலய உதவியாளர் தன்னை தாக்கினார் எனத் தெரிவித்து மாநகரசபை ஆணையாளரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 231

**597. இப்பொழுது கூட்டுக் கட்சிகள் தரவிருக்கும் சமர்ப்பணம் "தமிழ் பேசும் தரப்புக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதும் இலங்கை இந்திய ஒப்பந்தமும்'' என மாற்றப்பட்டுள்ளது என விசேட அறிக்கை தந்துள்ளாரே?**

தமிழர் தகவல் நடுவத்தின் சமர்ப்பணத்தின் அடிப்படை அவ்வாறே அமைந்திருந்தது. அது 13 ஆம் திருத்தத்தையே முற்று முழுதுமாக நடைமுறைப்படுத்தி விட்டால் என்ற கருத்தாக்கத்தில் தயாரிக்கப்படவில்லை.அதன் பிரதி, இந்த கூட்டங்களின் முன் தலைவர்களின் கைகளில் இருந்தது. நனைந்த கோழிகள் மரக்கொப்புகளில் இருந்து தூங்கிக்கொண்டிருப்பது போலில்லாமல் தமிழ் மக்கள் நேரடியாக இந்தியாவை அணுகி அதன் ஆதரவையும் பக்கபலத்தையும் தேடவேண்டும் என்ற உந்து தலை அவர்களுக்கும் தலைவர்களுக்கும் தருவதற்காகவே இந்தச் சமர்ப்பணத்தின் முன்னேற்பாடுகள் தொடங்கியது. அந்த முன்னேற்பாடு உந்து சக்தியாக இருந்து செல்வம் அடைக்கலநாதன், தமிழரசை கூட்டமைப்புக்கள் மட்டுப்படுத்துவது, சுமந்திரனின் அதிகாரத்தை கட்டுப்படுத்துவது எனப் புறப்பட்டாலும் கடைசியில் ஓரளவிற்காவது தற்சமயம் எல்லாத்தரப்புகளையும் உள்வாங்கி இந்தியாவிற்கு இணைந்த சமர்ப்பணம் தருவதற்கு வழிவகுக்கிறது. அத்துடன் இந்தியாவின் வழிகாட்டல்களில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஜீவன் தொண்டமானும் இணைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. கஜேந்திர குமார் தரப்பு இன்னும் தனித்து நிற்பதாகவும், இணையும் எண்ணங்கள் எதுவும் காட்டவில்லை எனவும் தெரிகின்றது. அந்த கூட்டத்தில் ரெலோவினால் சமர்ப்பிக்கப்பட்ட நகல் மூன்றோ, ஐந்து பக்கங்களில் 13 ஆம் திருத்தத்தை அமுல்படுத்தக் கோரியதாகவும் செய்திகள் வந்தன. அப்படியானால் இந்த நகல் வடிவத்தை தயாரித்தவர்கள் தமிழர் தகவல் நடுவத்தின் சமர்ப்பணத்தைக் கணக்கெடுக்க



கந்தசாமி


வில்லையா?அல்லது கூட்டு தலைவர்கள் கூட சமர்ப்பணத்தை பார்வையிடாமல் ரெலோ தொடங்கியதால் அவர்கள் முன்வைக்கும் நகலுக்கு என்ன பதில் தமிழரசு பகுதியில் இருந்து வருமென எதிர்பார்த்து அதிலிருந்து கூட்டுக் கட்சிகள் எடுக்க வேண்டிய முடிவை எதிர்பார்த்தார்களா?

இந்த நகல் ரெலோவினது மாத்திரமானால் அவர்கள் இந்தியப் பகுதியின் ஓர் அமைப்பு கேட்பதற்கு செல்வத்தின் மூலம் கூட்டமைப்பிடம் இருந்து பதில் எதிர்பார்க்கின்றனரா? புது டெல்லி ஒப்பந்தத்தை ஏற்படுத்திய நாள்தொட்டு இன்றுவரை 13வது திருத்தத்தை தமிழ் மக்கள் ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டும், அதிலிருந்துதான் மேலதிகாரங்களை பெற வேண்டும் என ஆணித்தரமாக சொல்லிக் கொண்டிருக்கிறது. இந்தியா தமிழ் மக்களின் கரிசனைகளுக்காக 1987 உள்ளீடு செய்து, ஒப்பந்தத்தை ஏற்படுத்தி, சிங்கள பெரும்பான்மைக்கு ஏற்படுத்திய பெரும் கிலியில், 13 ஆம் திருத்தத்தில் இருந்து, இந்தியாவின் அனுசரணையில் முன்னேறக் கூடிய யதார்த்தம் இருந்தது. ஆனால் இன்று அந்த நிலையில்லை. ஒப்பந்தத்தின் அடிப்படையில், தமிழ் மக்கள் இந்தியாவிடமிருந்து தங்களது பிரதேசங்களினதும் தங்களினதும் தனிப்பட்ட பாதுகாப்புகளையும் கோர வேண்டும். கூட்டமைப்புக் கூட, இப்பொழுது, தாங்கள் 12 வருடம் நடத்திய அரசியலிலிருந்து விழித்தெழுந்து ஒப்பந்தத்தையோ 13 ஆம் திருத்தத்தையோ எடுத்து, தூசிதட்டிப் பார்க்கிறார்கள். அவர்களது விழிப்பு "ஒரு நாடு; ஒரு சட்டம்; ஒரு மக்கள்" என்ற சிங்கள பெரும்பான்மை அவர்களது பிடரியில் இடிக்கும் போது தான் தோன்றுகிறது.

தமிழ் மக்களது அரசியல் கட்சிகளின் தலைவர்கள் வழமையாக ஏதோ, யாராவது கூப்பிட்டால் பங்கேற்று, அதில் அவ்வப்போது கச்சேரி வைத்து விட்டு கலைந்து போவதும், பின் தங்களது கட்சியின் நிலைப்பாட்டில் அறிக்கைகள் விடுவதும் தான் நடப்பது. தேர்தல்களில் தங்களுக்கு வரக்கூடிய வாக்கு ஆதாயங்களைக் கணக்கெடுத்து தூரதரிசனமற்ற பார்வைகளில் தீர்மானங்கள் மேற்கொள்ளுதல் தான் தமிழ் மக்களுக்கு ஆதங்கங்களாக உள்ளன. அவையே அவர்களை அவர்களின் இன்றைய நிலைக்கு தள்ளியுள்ளது.


**598. இது இன்றுள்ள வழமையல்லவே?**

இவை காலம் காலமாக நடப்பவை தான். அரசியல் நீரோட்டங்களிலும் பல தலைவர்கள் மேலோட்டமாக நீச்சலடித்து கொண்டு ஆழக் காலை வைத்து இறங்கி விடாமல் நடந்து கொண்டார்கள்.



காந்தீயம் அமைப்பின் பிதாமகர்களுள் மூவர். டாக்டர் இராஜசுந்தரம், டேவிட் ஐயா, சந்ததியார்.

1977 - 1980 காலங்களில் தமிழர் அகதிகள் புனர்வாழ்வு கழகமும் (TRRO), காந்தீயமும் குறைந்தது மாதத்திற்கு ஒரு முறையாவது வவுனியாவில் தாங்கள் மேற்கொள்ளும் குடியேற்ற திட்டங்களை பற்றி கலந்துரையாடுவதற்கு டேவிட் ஐயா, டாக்டர் ராஜசுந்தரம் குடியேற்ற திட்டங்களில் பணியாற்றும் இளைஞர்கள் போன்றோரை ஈடுபடுத்தி கூட்டங்கள் வைப்பது வழமை. அநேகமாக TRRO



டேவிட் ஐயாவின் வயோதிக் காலப் படம்.

விற்காக நான், கந்தசாமி, வண. பிதா ஜேம்ஸ் அடிகளார் அதில் பங்கு பற்றுவதும், அந்தக் கூட்டங்களை சில சமயங்களில் நடத்துவதும் வழமை. இந்தக் கூட்டங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஈடுபடுத்தி அவர்களும் இந்த திட்டங்கள் பற்றி அறிந்து கொள்ள - திட்டத்தில் அமர்த்தப்பட்ட மக்களின் குறைகளை கேட்டு செய்யக் கூடிய நிவர்த்திகளை ஆராய - அவர்களில் வரக்கூடியவர்களை கட்டாயப்படுத்தி அழைப்பது வழக்கம்.

உண்மையில், அவர்கள் இவற்றில் கலந்து அடையாளப்படுத்த விரும்பாமல் பின்னணியில் இருந்து தங்களது நலனில் தகவல்களைக் கிரகித்துக் கொள்ளவே விரும்பினார். வசதிக்காக நாம் காலை யாழ் தேவியில் வவுனியா வந்திறங்கி, பகல் வேளையில் கூட்டங்களை முடித்து விட்டு இரவிற்கு முன் குடியேற்ற பண்ணைகளுக்குப் போவது வழமை. இணங்கி கூட்டத்துக்கு வரும் நாடாளுமன்ற உறுப்பினர் ஓரிருவர் எங்களுடனேயே யாழ் தேவியில் வருவார்கள். கூட்டங்களில் எவ்வளவோ பேசப்படும். ஆயினும் கூட்டம் நடத்துநரின் மேசைக்கு வரும் சீட்டு "மத்தியான யாழ்தேவி வவுனியாவுக்கு எத்தனை மணிக்கு வரும் என்று கேட்டு சொல்ல முடியுமோ?" என்பது. அந்தக் காலங்களில் மொபைல் போன் இருக்கவில்லை பின்னர் "நேரத்துக்க வருமா?", "யார் தங்களை புகையிரத நிலையத்தில் விடுவார்கள்?" என்பவை தான் நடக்கும். காரியங்களில் ஊக்கம் அவ்வளவு தான். அவர்களது அரசியல் நாடாளுமன்ற டைரிகளை அனுசரித்தே நடந்தது. வளர்ந்த தேசியத்தில் அவர்கள் ஏற்படுத்திய உறவுகளும் அத்தகையவே.

புதிய அரசமைப்பும் இந்தியாவுடனான அணுகுமுறையும் சமர்ப்பணமும் முக்கியமாக இருக்க, செய்திகளின்படி மாவை சேனாதிராசாவுக்கு அழைப்பிதழ் கொடுபட்டதா, இல்லையா, அதனை சித்தார்த்தன் கொண்டு சென்று கொடுத்தாரா, எந்த நேரம் கொடுத்தார் என்பது பற்றிய வாக்குவாதங்களும் சாட்சியங்களும் தான் வலம் வந்து கூட்டத்தின் கணிசமான நேரத்தை எடுக்கின்றன போலும்.

அதில் யாழ்ப்பாணம் திரும்ப நேரங்கள் பார்த்தால், சமர்ப்பணத்தை ஒட்டிக் கருத்துக்கள் சேர்க்க நேரமின்மை வந்து, ஏதோ செய்யுங்கள், பார்ப்போம் என்ற மனப்பாங்குதான் பெருகும்.

அடுத்த பக்கம் இப்பொழுதும் கட்சி நலன்களும் ஆதாயங்களும் பார்த்து தமிழ் மக்கள் தேசிய முன்னணியும், தமிழ் மக்கள் தேசிய கூட்டணியும் எடுத்த முடிவுகளால் 2018 ஆம் ஆண்டிலிருந்து தம் வசம் இருந்த முக்கியமான வவுனியா வடக்கு பிரதேச சபையின் கட்டுப்பாட்டை தமிழர் கூட்டமைப்பு சுதந்திரக் கட்சிக்கு இழந்தது என குற்றங்கள் கூறுகிறார்கள். கூட்டமைப்பு அதனை இழந்தது ஒரு வாக்கினால்தான். ரிஷாத் பதியுதீனின் கட்சி அங்கத்தினரின் ஒரு வாக்கைக் கூட்டமைப்புக்கு சாதகமாக கேட்டும் அந்த அங்கத்தினர் சுதந்திரக் கட்சி தரப்பால் முன்னரே வாங்கப்பட்டு விட்டதாகவும் அவரது கட்சி சொன்னாலும், அவர்களின் உத்தரவுப்படி வாக்களிக்கமாட்டார் என ரிஷாத் தரப்பினால் சொல்லப்பட்டதாகத் தகவல்கள்.

இவைகளெல்லாவற்றையும் யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை, நல்லூர் பகுதிகளுக்கு நடக்கும் தேர்தல் பேரங்களுடன் சேர்த்து பார்த்து சி.வீகே.சிவஞானம் சொல்லுவதையும் உணர்ந்தால் தேர்தலை தவிர, தேசியத்தை எப்படி முன்னெடுப்பது என்ற திட்டங்களோ அவற்றிற்கான கட்டமைப்புக்களையோ உருவாக்க வேண்டும் என்ற சிந்தனைகளோ அர்ப்பணிப்புக்களோ அவர்களிடம் உண்டா அல்லது வரிக்கு வரி அதைப் பாராணயம் செய்து விட்டு கிடைக்கும் சுண்டல், தேங்காய்ச் சொட்டுடன் திருப்திப்படுபவர்களா தெரியவில்லை

(வளரும்)

# பாட்டும் நானே? பாவமும் நானே!

**'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி – பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்கு தீனியாகிறது.**




**1. கேள்வி:-**எந்தத் தத்துவம் கடவுளை நமக்கு முழுமையாய்க் காட்டும்?

**பதில் :-** உங்கள் கேள்வியில் இருக்கும் 'முழுமையாய்' என்ற சொல் இக் கேள்வியைச் சிக்கலாக்கியிருக்கிறது. நேர்மையாக உங்கள் கேள்விக்குப் பதில் சொல்வதேயானால் எந்தத் தத்துவமும் இறைவனை நமக்கு முழுமையாய்க் காட்டாது என்பதே பதிலாக வேண்டும். ஏனென்று கேட்பீர்கள்? இறைவனுடைய முற்றறிவுக்குள்ளே அடங்கிக் கிடக்கும் சிற்றறிவுடைய மனிதர்கள் நாங்கள். எந்தத் தத்துவமேனும் நம் சிற்றறிவுக்கு இறைவனை முழுமையாகக் காட்டிவிடுமானால் நம் சிற்றறிவுக்குள் அகப்பட்ட குற்றம் இறைவனுக்காகிவிடும். அதனால்த்தான் எந்தத் தத்துவமும் இறைவனை முழுமையாய்க் காட்டாதுஎன்று சொல்கிறேன். விரிந்த கடலுக்குள் இருக்கும் சிறிய மீன் கடலின் முழுமையை அறிவது எங்ஙனம்? அதுபோலத்தான் இதுவும். அப்படியானால் இறைவனை என்றைக்கும் யாரும் காணவே முடியாதா? என்ற கேள்வி பிறக்கும். அதற்கான பதிலும் உண்டு. நான் இறைவனைக் காண்கிறேன் என்ற நிலை மாறி, காண்பவன, காணும் பொருள், காட்சி எனும் விடயங்களெல்லாம் ஒன்றாகி, நாம் அவனுடன் இரண்டறக் கலந்து, அவனாகவே மாறினால் மட்டுமே அது சாத்தியமாம்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * யாரங்கே? நமது வாரிதியாருக்கும் 'சித்தாந்தரத்தினம்' பட்டம் ஒன்றைக் கொடுத்துவிடுங்கள்! (அப்பவாவது இந்த தத்துவ கழுத்தறுப்புக்கள் நிக்குதா பார்க்கலாம். ஹி..ஹி..)**

**2. கேள்வி:-** பருத்தித்துறைக் கடல் எல்லைக்கு வந்த சீனத்தூதர், 'இங்கிருந்து இந்தியா எவ்வளவு தூரம்?' என்று கேட்டது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?




**பதில் :-** இதைக் கூடத் தெரியாத ஒருவர் ஒரு நாட்டின் தூதுவராக எப்படி இருக்கமுடியும்? தெரியாமல் இந்தக் கேள்வியை அவர் கேட்கவில்லை. இந்தக் கேள்வியூடு தன் பயணத்தின் நோக்கம் இந்தியாவைச் சீண்டுவதுதான் என்று வெளிப்படையாய்க் காட்டியிருக்கிறார். அவ்வளவுதான்.

அவரது கேள்விக்கு ஊடகங்களில் கொடுக்கப்பட்ட விரிவான விளம்பரங்கள் கூடத் திட்டமிடப்பட்டவையோ என ஐயுற வைக்கின்றன. அவரது இந்த அசட்டுத்தனமான கேள்விக்குள் இந்தியாவிற்கு விடப்பட்ட எச்சரிக்கை தெளிவாய்த் தெரிகிறது. இராவணன் இலங்கையின் எல்லையில் நின்று இந்தியாவில் நின்ற இராமனின் படையைப் பார்த்த 'தானை காண் படலம்'தான் நினைவுக்கு வருகிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் * சீனாவும் 'சி'னாவும் சேர்ந்து இந்தியாவுக்குச் சவால் விடுகிறார்களோ?**

**3. கேள்வி:-** இன்று நம் கவிதைத்துறை ஆரோக்கியமாய் இருக்கிறதா?

**பதில் :-** கவிதையை இயற்றமிழ்த் துறையின் 'அரசி' என்பார்கள். அது சத்தியமான உண்மை. ஓர் அரசியைத் தம்வயப்படுத்துவதென்பது இலேசான காரியமா என்ன? இந்த உண்மை புரியாமல் இன்று எல்லோரும் தத்தம் தகுதி தெரியாமல் அவளை அடையும் முயற்சியில் வெகு சாதாரணமாக இறங்குகிறார்கள். பெரும்பாலும் அவர்களது முயற்சிகள் எல்லாம் 'ஒருதலைக் காதலாய்த்தான்' இருக்கின்றன. கவிதையரசியானவள் இவர்களில் பலரைத் திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை. இவர்களோ அவளைத் தாம் ஈர்ப்பதாய் நினைந்து என்னென்னவோ எழுதித் தமது 'அரிப்பை'த் தீர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இன்று பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவரும் கவிதைகளைப் பெரும்பாலும் பார்க்கச் சகிக்கவில்லை. புதுக்கவிதை என்ற பெயரில் ஏதேதோ எழுதுகிறவர்களைக் கூட மன்னித்து விடலாம். மரபுக் கவிதை என்று, ஒரு தொடர்பும் இல்லாத நான்கு வரிகளை இணைத்து வெளியிடுவோரின் 'அட்டூழியத்தை'த் தாங்கமுடியவில்லை. ஒரு காலத்தில் எஸ்.டி. சிவநாயகம் போன்ற, கவிதையின் சுவை தெரிந்த, கவிதை எழுதத் தெரிந்த பத்திரிகையாசிரியர்கள் கவிதைகளைத் தேர்ந்தெடுத்து வெளியிட்டு, கவிஞர்களையும் கவிதையையும் வளர்த்தார்கள். இன்று பெரும்பாலான பத்திரிகை, சஞ்சிகை ஆசிரியர்களுக்கு மரபுக்கவிதை பற்றி ஒன்றுமே தெரியவில்லை. அதனால் நான்கு, நான்கு வரியாக எவர் எதை எழுதி அனுப்பினாலும் அதை மரபுக்கவிதை என்ற பெயரில் வெளியிட்டு அநியாயம் செய்து கொண்டு இருக்கிறார்கள். இதுவும் ஒருவகை 'வன்புணர்ச்சி'தான். முதலில் அந்த ஆசிரியர்களைச் சிறையில் வைத்து, பின்னர் அப்படி எழுதுகிறவர்களைத் தூக்கிலிடவேண்டும்.

காலத்தின் கோளாறோ என்னவோ? ஒழுங்காக எழுதக்கூடிய சில கவிஞர்களும் கூட, நவீன அறிவுலகத்தாரைச் சமாளிப்பதாய் நினைந்து, மொழிபெயர்ப்புக் கவிதை என்றும், வசனக் கவிதை என்றும் எதையெதையோ எல்லாம் எழுதித் தம் பங்கிற்கும் பழி தேடிக் கொண்டிருக்கிறார்கள். கவிதைத் தாய்க்கும் கொஞ்ச நாள்களாய் கிரகநிலை சரியில்லை போல் தெரிகிறது.



தமிழ்க் கவிதையைப் பொறுத்தவரை கிட்டத்தட்ட அதற்கு 2000 ஆண்டுகள் தொன்மை இருக்கிறது. அந்தக் காலநீட்சியில் தமிழ்க்கவிதை பெற்றிருக்கும் வளர்ச்சி மிக ஆழமானது. அத்தகைய எங்கள் கவிதையைத்தான் புதிய வேற்று மொழியாளர்கள் மொழிபெயர்க்க வேண்டும். அது தெரியாமல் எங்கள் கவிஞர்கள் தமிழில் ஏதோ கவிதைக்குப் பஞ்சம் என்றாற்போல எதையெதையோ மொழிபெயர்த்துக் கொண்டிருக்கிறார்கள். புலியைப் பார்த்து பூனை குறிசுட்டுக் கொள்ளலாம். இது பூனையைப் பார்த்துப் புலி, குறிசுட்ட கதைதான். இதைப் பாராட்டவும், பரிந்துரைக்கவும், ஆய்வு செய்யவும் அறிஞர் என்று சொல்லிக்கொள்வோர் பலர் உதித்துவிட்டனர். (எங்கே என்று நான் சொல்ல மாட்டேன்.) தமிழ்க்கவிதை எனும் பாஞ்சாலியை இந்தத் துச்சாதனர்களிடமிருந்து எந்தக் கண்ணன் வந்து காப்பாற்றப் போகிறானோ?

**உலகநாதரின் ஒப்பீனியன் * "காற்று வாங்கப் போனேன். ஒரு கவிதை வாங்கி வந்தேன் ஹி..ஹி.."**

**4. கேள்வி:-** இலங்கையில், வர வரச் சீனாவின் போக்கு இந்தியாவின் மூக்கு நுனியைத் தொடும்வரை துணிந்து நீள்கிறதே. இந்தியா மீண்டும் இங்கே வந்து இறங்குமா?

**பதில் :-** 'வரும், ஆனால் வராது' என்று ஒரு பிரபலமான நகைச்சுவை நம் சினிமா உலகத்தில் பதிவாகியிருக்கிறது. அதுபோலத்தான் இந்தியா வருமா? என்ற கேள்விக்கும் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. தங்களது நாட்டின் எல்லையில் சீனா அடிக்கடி செய்யும் 'சேட்டைகளை'க் கூட இந்தியா நேரடி மோதலால் அன்றி வேறு வேறு விதமாகத்தான் எதிர்கொண்டு வருகிறது. அப்படியிருக்க நம் நாட்டில் அது சீனாவோடு நேரடியாய் மோதும் என்று தோன்றவில்லை. நமது எதிரி நம் பக்கத்துவீட்டுக்காரனுடன் உறவு வைத்து, அங்கு வந்து தங்கி நமக்குத் தொல்லை கொடுத்தால், அவனை இரண்டு விதமாகத் துரத்தலாம். ஒன்று, நேரடியாகப் பக்கத்து வீட்டினுள் புகுந்து பக்கத்து வீட்டுக்காரனையும் தாக்கி வந்த எதிரியையும் தாக்கிப் பிரச்சினையைத் தீர்ப்பது. அதைவிட இன்னொரு வழியும் இருக்கிறது. பக்கத்துவீட்டுக்காரனுக்குத் தாங்க முடியாத அளவுக்கு நெருக்கடிக்கு மேல் நெருக்கடியைக் கொடுத்தால் அவன் தானாக தன் வீட்டில் வந்தமர்ந்தவனைத் துரத்திவிடுவான். இந்தியா இந்த இரண்டாவது வழியைத்தான் முதலில் கடைப்பிடிக்கும் என்று நினைக்கிறேன். நம்?மூதாதையர் கள் கூடப் போர் உத்திகளைச் சாம, பேத, தான, தண் டம் என வரிசைப்படுத்துகையில் தண்டத்தைக் கடைசியாகத்தான் வைத்திருக்கிறார்கள். தேவை ஏற்படுமானால் மேற்சொன்ன முதலாவது வழியையும் நடைமுறைப்படுத்த இந்தியா தயங்காது என்பது வேறு விடயம்.

இலங்கையினுள் நுழைய, கடன் கொடுத்த உரிமையைத் தவிர சீனாவுக்குக் வேறொரு உரிமையும் இல்லை. இந்தியாவிற்கோ தமிழர்களைத் தொப்புள் கொடி உறவுகளாய்க் காரணம் காட்டி இங்கு நுழையும் உரிமை இருக்கிறது. (முன்பு நுழைந்த சான்றையும் வைத்துத்தான் சொல்கிறேன்.). சிங்கத்தையும் புலியையும் மோதவிட்டு நரி வாழப்போகிறதா? அவற்றின் மோதலில் நரி சாகப் போகிறதா? என்பது தான் இப்போதைய கேள்வி. காலந்தான் முடிவைத் தீர்மானிக்கப் போகிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் * ஊரான் வீட்டுச் சண்டையை நம் வீட்டுக்குள் இழுத்த கதைதான்.**

**5. கேள்வி: -** எரிபொருள் விலையேறிவிட்டதே?

**பதில் :-** உங்கள் கேள்வியில் பிழை இருக்கிறது. எரிபொருளும் விலையேறிவிட்டதே என்றுதான் உங்கள் கேள்வி இருக்கவேண்டும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * இறந்தது தழீஇய எச்ச உம்மை சூப்பர். நமக்கும் கொஞ்சம் இலக்கணம் தெரியுமாக்கும். ஹி..ஹி..**

**6. கேள்வி:-** வேட்டி, சால்வையுடன் நல்லூருக்குச் சென்று வழிபாடு செய்த சீனத்தூதரின் பக்தியைப் பார்த்தீர்களா?

**பதில் :-** அதை ஏன் கேட்கிறீர்கள்? வேடிக்கையின் உச்சம் அது! சீனர்களுக்கு நம் ஆலயத்தில் என்ன வேலை என்று கேட்கலாம் என்றால், அதற்கும் வழியில்லை. ஏனென்றால் பழனி ஆண்டவரை ஒன்பது வகை நஞ்சு கலந்த 'நவபாாணத்தால்' தயாரித்த 'போகர் என்கின்ற சித்தரும் சீனர்தான் என்கிறார்கள்.

(13ஆம் பக்கம் பார்க்க)

# எழுத்தாளர், சமூக சேவகர் கலைக்குருசில் பிரான்சிஸ் ஜோசப்

- ப்ரியமதா பயஸ் -

சமூகம் என்பது எப்போதும் கூட்டு வாழ்வியலின் அடையாளமே, கூட்டு வாழ்வியலை எப்போதும் சமூகத்துக்குள் விதைப்பவர்கள் சமூக சேவகர்களும் எழுத்துலகில் இருப்பவர்களும் தான். அந்த இரண்டு அடையாளங்களையும் தனக்கு உரியதாக்கி வாழ்ந்துகொண்டு இருப்பவர்தான் யாழ்ப்பாணத்தின் நாவாந்துறை மண்ணின் மூத்த எழுத்தாளரும், சமூக சேவகருமான பிரான்சிஸ் ஜோசப் அவர்கள். அவரது சமூகப் பணிகள் பற்றியும் எழுத்துப் பணிகள் பற்றியும் இந்த வாரம் தெரிந்து கொள்வோம்.

இயற்கையுடன் இணைந்த வாழ்வியலைக் கொண்ட நாவாந்துறை மக்கள் எப்போதும் இயல்பான சமூக நல்நோக்கம் கொண்டவர்களே, கடலும் கடல் சார்ந்த அழகியலையும் தம் வாழ்வியலாகக் கொண்ட இவர்களுக்கு நல்ல வழிகாட்டியாக இருக்கும் கலைக்குருசில் பிரான்சிஸ் ஜோசப் நாவாந் துறை மக்களின் மனங்களில் நீங்காத இடம் பிடித்தவர்.



கலைக்குருசில் அரச கௌரவத்தை பெற்றிருக்கும் பிரான்சிஸ் ஜோசப் நாவாந்துறை மண்ணின் பெருமைகளையும் அங்கே வாழ்ந்தவர்களின் வரலாறுகளையும் தான் பின்பற்றும் மதம்சார்ந்த பெரியவர்களின் வரலாறுகளையும், மண்ணின் சிறப்புகளையும், வரலாற்று சான்றுகளாக எழுத்துருவில் இந்த சமூகத்துக்கு வழங்கி இருக்கிறார். யாழ்ப்பாணத்தின் நாளிதழ்களான ஈழநாடு, ஈழமுரசு, சஞ்சீவி, உதயன், வலம்புரி, தினக்குரல் போன்ற பத்திரிகைகளில் நூற்றுக்கும் மேற்பட்ட சமூக கவிதைகளையும், எங்கள் வரலாற்று சிறப்பு நாள்களுக்கான கவிதைகளையும் வரலாறு திரிவுபடாத படைப்புக்களாக வெளிக்கொணர்ந்து இருக்கின்றார்.

நாவாந்துறை மண் தொடர்பாகவும் அந்த மக்களின் வாழ்வியல் தொடர்பாகவும் பல் கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறை மாணவர்கள் பல்கலைக்கழக பேராசிரியரிடம் கற்றுக் கொண்டதைவிட பிரான்சிஸ் ஜோசப் அவர்களிடம் கற்றுக்கொண்டதே அதிகம் என்று சொல்லலாம். அந்தளவிற்கு அந்த பகுதியின் மக்களின் வரலாற்றை நன்கு தெரிந்தவராகவும், கரையோர மக்களின் வாழ்வியல் பிரச்சினைகளுக்கு சரியான தீர்வுகளை சொல்லக்கூடிய அனுபவசாலியாகவும் பிரான்சிஸ் ஜோசப் அவர்கள் இன்றுவரை இருக்கிறார். 86 வயதை தாண்டி இருக்கும் இந்த அறிவும் ஆளுமையும் நிறைந்த மனிதரின் முதுமையும் தன் எழுத்துக்களின்பால்



கொண்ட வீச்சு போக்கையே சொல்லி நிற்கிறது.

ஆண்டு விழாக்கள், எம் மண்ணின் விடுதலை வீரர்களின் வரலாறுகளை அத்துப்படியாக தெரிந்து வைத்திருக்கும் பிரான்சிஸ் ஜோசப் அவர்கள் இந்த வரலாற்று பொக்கிஷங்களை பெரும்பாலும் கவிதை வடிவிலேயே நமக்கு வழங்கி இருக்கிறார். ஈழப் போராட்டம் தொடர்பான வரலாற்று செய்திகளை அவர் அதிகம் தன்னகத்தே வைத்திருக்கிறார். மண் சார்ந்தும், மக்கள் சார்ந்தும் எப்போதும் கரிசனையுடன் இருக்கும் அவர் வரலாறுகளை மாணவர்கள் மத்தியில் இட்டுச் செல்வத்திலும் இன்றுவரை அக்கறை காட்டும் ஊர் பெரியவராகவே திகழ்கிறார்.

நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட சிறிய தீவான இலங்கையின் அத்தனை பாகங்களையும் வரலாற்று ரீதியாக சுலபமாக நமக்கு வெளிக்கொணரும் முதிய அறிவுடன் விளங்கும் ஒரு மூத்தவராக இருக்கிறார்.

நாவாந்துறை மக்களின் வாழ்வியல் தொடர்பான ஆய்வுகளுக்கு யார் சென்றாலும் பிரான்சிஸ் ஜோசப் அவர்களே வரலாற்றை விளக்கக்கூடிய பெரியவராக அனைவராலும் கைகாட்டி விடப்படும் பெரியவராவார் மூன்று தலைமுறையினரின் வாழ்க்கை தாற்பரியங்களை பார்த்திருக்கும் பிரான்சிஸ் ஜோசப் அவர்கள் அந்தந்த தலைமுறையினரின் வாழ்க்கைப் போக்குகளையும் தேவையான நல்நோக்க சிந்தனைகளை யும் எழுத்துவடிவில் சமகால அச்சு ஊடகங்களில் வெளிப்படுத்தி இருக்கிறார் .

நாவாந்துறை மண்ணின் ஆலயங்களின், பாடசாலைகளின், பொது அமைப்புகளின், விளையாட்டு கழகங்களின், ஏன் நம் வரலாற்று வீரர்களின் மலர்களிலும் கல்வெட்டுகளிலும் அவரின் எழுத்துக்கள் இல்லாமல் வெளிவந்தே இருக்காது. அவரின் வாழ்த்து செய்தி ஒன்றோ அல்லது வரலாற்றுப் பதிவு ஒன்றோ இல்லாமல் ஆண்டுமலர்களை காணமுடிவதில்லை.

பெரும்பாலும் அவர் சார்ந்த சமயம் தொடர்பான நிகழ்வுகளில் அவரின் பங்களிப்பும் எழுத்தும் மிகவும் பிரதானமானதாகவே இருக்கும். அதுபோல வறியவர்களுக்கு உதவும் அமைப்பான புனித வின்சென்டிபோல் சபையில் அவர் அங்கம் வகிக்கும் காலம்முதல் இன்றுவரை அவரின் உதவியும் ஆலோசனையும் எப்போதும் முதன்மையாகவே இருக்கிறது.

தமிழனின் வரலாற்றை வரலாறாக உண்மையாக அடுத்த சந்ததிக்கு கொண்டு செல்ல வேண்டும் என்பதில் எப்போதும் முனைப்புடன் இருக்கும் பிரான்சிஸ் ஜோசப் வரலாற்று தடங்களை தன் மனதில் வைத்து இருக்காமல் எழுத்து வடிவில் அடுத்த தலைமுறைக்கு வழங்கி இருப்பது என்றும் மதித்து போற்றத் தக்க வரலாற்று செயற்பாடே. மூண்டெரியும் போர் நெருப்பு என்ற தலைப்பில் புனித நீக்கிலாருக்கான கவிதை ஒன்றை கீழ் வருமாறு தருகிறார். இதில்கூட அக்கால கட்ட சூழ்நிலையை அவர் குறிப்பிடாமல் விடவில்லை.

அழகு ரதம் மீதமர்ந்து வாருமையா
சத்திய திருச்சபையின் சக்தி மிகு புனிதராக
சன்மார்க்க நெறி வளர்த்த
சான்றோனாகிய எத்திக்கும்
புகழ் மணக்கும் எம்பதியில்
அமர்ந்து அருள்பொழியும் அற்புதரே
நீக்கொலாரே பாலப்பருவ முதல் பரமன்
யேசுவுக்காய்பத்தியால் காத்து
பாவவழி நாடாத பண்பாளனாய்
ஏழை எளியவரை ஏற்றுத் தவி புரிந்தவரே
என்றுமும்மை நன்றியுடன் நாம் தொழுவோம்
பாலர்களைப் பரிவுடனே அரவணைத்து
பரமனாம்
எங்கள் தேவமகன் பிறப்புநாளில்
பல்வேறு சுவையுடைய



தீன்பண்டங்களைபாடலுடன் பகிர்ந்தளித்து
மகிழ்ந்தீரையா பண்பான குடும்பமொன்றின்
மகளிர் மூவர்பாழ் வறுமைப்பிணியதனில் நின்று
மீட்டு பண்பான வாழ்வமைத்து கொடுத்தவரே
பணிவாகத் தொழுகின்றோம்
உம்பாதமதை நற்றமிழின் சுவை மணக்கும்
நாவாயூரில்கடல்வளமும் கனி
வளமும் பெருக வைத்து
கருணையுடன் எமைக் காக்கும்
காவலரே பொல்லாத போர் வெறியின் பிடியில்
சிக்கிவதிவிடமும் வளம் மிகு நிலமும் இழந்ததோடு
புலம்பெயர்ந்து எங்கெங்கோ இருக்கும்எம்மிதைய
உறவுகட்காய் இரங்குகின்றோம் நாம்
அங்கவர்க்கும் அருள் வளங்கள் அளிப்பீரையா
பொல்லாத நோய் பிணியும் அகதி வாழ்வும்
வல்லாரின் வல்வினையும் இல்லாதாக்கி
எரிய முனைகின்ற போர் அணைந்து
அமைதிகண்டுஎன்னாளும்
எமது மண்ணை நாமே ஆழ அமைதியுடன்
நல்வாழ்வும் பேணிக்காக்க அழகுரதம் மீதமர்ந்து
வாருமையா .

என்றும் தன் குடும்பச் சூழல், ஒட்டுமொத்த நாட்டு மக்களின் சூழல் என அத்தனை விடயங்களையும் பக்தியாகவும் சிரத்தையாகவும் இந்த கவிதைக்குள் கொண்டுவந்திருக்கிறார். அதுபோல

(09ஆம் பக்கம் பார்க்க)



# துணிச்சலோடு தமிழ்த் தேசியத்தின் மீது பற்றுக்கொண்டு மக்களோடு மக்களாக நின்றவர் ஜோசப் பரராஜசிங்கம்!

## தமிழரசு வாலிபர் முன்னணி தலைவர் சேயோன் தெரிவிப்பு



துணிச்சலோடு தமிழ்த் தேசியத்தில் பற்றுக்கொண்டு மக்களோடு மக்களாக நின்று களப்பணி செய்த யோசப் பரராஜசிங்கம், யேசு பாலன் பிறந்தநாளில் அவரின் சந்நிதியிலே நடுநிசி நேரம் இரத்தக்கறை படிந்த மரணத்தை அந்த கணங்களை எந்த மனிதனாலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

- இவ்வாறு அவரது நினைவு தினத்தில் நினைவு கூர்ந்தார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணித் தலைவர் கி.சேயோன்.

அவரது மறைவு தொடர்பில் அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

மட்டக்களப்பு மண்ணில் அன்றைய காலத்தில் ஒவ்வொரு நாள்களையும் கடத்துவதென்பது தமிழ்தேசியவாதிகளுக்கும் தமிழ்த்தேசியத்தை இறுக்கமான கொள்கையாக கொண்டவர்களுக்கும். மிகக் கடினமானதாகவே இருந்தது.

தலைப்புச் செய்திகள் எல்லாமே படுகொலைகளும், கடத்தல்களும் என நீண்டு கொண்டே சென்றகாலம். மனித குலத்தின் மிகமோசமான பிரிவினைவாத சிந்தனைகளில் தமிழினமே சிக்குண்டு நிலைகுலைந்த நேரங்கள். பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. அந்த நேரத்தில் துணிச்சலோடு தமிழ்த் தேசியத்தில் பற்றுக் கொண்டு மக்களோடு மக்களாக நின்று களப்பணி செய்தவர்தான் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜேசப் பரராஜசிங்கம்.

இவரினுடைய ஆளுமை அபாரமானது. அரசியல் தளத்தில் பல முக்கிய நிகழ்வுகளைத் தமிழ்மக்களுக்கெதிராக நடைபெற்ற அநீதிகளை சர்வதேசம் வரை கொண்டு சென்றவர். குறிப்பாக பல படுகொலை சம்பவங்களை துணிந்துநின்று வெளி உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டியவர்.

அந்தக் காலங்களில் லண்டன் பி.பீ.சி. செய்திகளில் தான் உண்மையான விடயங்கள் வெளிவரும். அதில் ஜோசப் ஐயாவின் குரல் அடிக்கடி கேக்கக்கூடியதாக இருந்தது. சர்வதேச இராஜதந்திரிகளை சந்திப்பதும், நியாயத்தைக் கோருவதுமென தமிழரர்களுக்கெதிரான கொடுமைகளுக்கு நீதி வேண்டி நெடும்பயணம் மேற்கொண்ட மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம். இவரது ஆங்கில புலமை அபாரமானது. எதிரிகளைக் கூட பேசி இணங்க வைப்பது இவருக்கு இருக்கும் விசேட தகைமை. ஆனால் துரோகிகளால் வீழ்த்தப்பட்டதுதான் இனத்துக்கான சாபக்கேடு. அதுவும் யேசு பாலன் பிறந்தநாளில் அவரின் சந்நிதியிலே.

நடுநிசி நேரம் இரத்தக்கறை படிந்த அந்த கணங்களை எந்த மனிதனாலும் ஏற்றுக்கொள்ள முடியாது. மனித குலத்தின் அவமானத்தின் மையப்புள்ளி தேவனின் சந்நிதான இரத்தக்கறைகள். ஒரு மக்கள் பிரதிநிதியை, மனிதஉரிமை காவலனை காவுகொண்டதால் என்ன விடயத்தை சாதிக்க முடிந்தது இந்த கும்பலால்? இவரின் இழப்பானது இன்னும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பே. 16 வருடங்கள் ஓடிப்போயின. இலட்சியப்பயணங்கள் முடியவில்லை. - என்றுள்ளது.

# நத்தார் நாளில் நயவஞ்சகர் துப்பாக்கியால் பலியானார் மாமனிதர் ஜோசப் பரராசசிங்கம்!

## முன்னாள் எம்.பி. அரியநேத்திரன் காட்டம்



மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவருமான ஜோசப் பரராஜசிங்கம் டிசெம்பர் 25, 2005 அன்று 12.15 மணியளவில் மட்டக்களப்பு செயின்ற் மேரி தேவாலயத்தில் வைத்து அடையாளம் காணப்படாத ஒருவரால் சுட்டு கொல்லப்பட்டார். இவர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினராகவும், பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினராவும் இருந்தவர்.

அவரது 16 ஆம் ஆண்டு நினைவு நாளில் அவர் பற்றிய குறிப்புக்களை மீட்டுள்ளார் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

அறுபதுகளில் தமிழரசுக் கட்சி மூலம் அரசியலுக்குள் நுழைந்த இவர், தான் பத்திரிகையாளராக பணியாற்றிய காலத்தில் தனது மனைவியார் பெயரில் (சுகுணம் ஜோசப்) கட்டுரைகளை எழுதி வந்தார். மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரச்சினைகளை வெளிக்கொணர இவர் எழுதிய கட்டுரைகள் பல அப்பகுதியில் மிகவும் பிரசித்தமானவை. மட்டக்களப்பு மாவட்டத்தில் பத்திரிகையாளர் அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதிலும் முன்னின்றவர் இவர். அந்த அமைப்பின் ஆரம்பத் தலைவரும் இவரே.

1989 இல் பல தமிழ் அமைப்புகள் சேர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் பட்டியலில் தேர்தலில் போட்டியிட்ட சமயம் இவரும் அந்தப் பட்டியலில் இடம்பெற்றார். ஆயினும் அப்போது அவர் அந்தத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப் படவில்லை.

இருந்தபோதிலும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அப்போதைய மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான சாம் தம்பிமுத்து, கொழும்பில் கனேடியத் தூதரகத்துக்கு முன்பாக வைத்து தனது மனைவியார் கலா தம்பிமுத்து சகிதம் சுட்டுக்கொல்லப்படவே, அந்த இடத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினராக ஜோசப் நியமிக்கப்பட்டார்.

அதனை அடுத்த தேர்தல்களில் ஜோசப் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினராகத் தொடர்ந்த போதிலும், வடக்கு கிழக்கில் ஏற்பட்ட அரசியல் நிகழ்வுகள் காரணமாக கடந்த 2004, பொதுத் தேர்தலில் அவர் தோல்வியடைய நேர்ந்தது. ஆயினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் (தமிழரசுக் கட்சி) சார்பில் தேசியப் பட்டியல் மூலமான உறுப்பினராக அவர் நாடாளுமன்றத்துக்கு நியமிக்கப்பட்டிருந்தார்.

தமிழ் மண்ணையும், தமிழ் மக்களையும் நேசித்த மாமனிதர் அவர். தன் நண்பர்களுக்காகத் தன் உயிரையும் தருபவனிடமுள்ளதை விடவும் மகத்தான அன்பு வேறெவரிடமும் இருக்க முடியாது என்ற பைபிளின் மிகவும் அழகிய இந்த வாசகத்துக்கு மிகப் பொருத்தமான ஒரு மனிதர் மறைந்த ஜோசப் பரராஜசிங்கம. அதனால் ‘மாமனிதர்’ என்ற விருதும் அவருக்கு வழங்கப்பட்டது.

மண்ணையும்மக்களையும்நேசித்த, குறிப்பாக ஆக்கிரமிப்பாளரின் கொடுமைகள் மிகுந்த கிழக்கு மாகாணத்தில் வாழ்விலும் தாழ்விலும் பங்கெடுத்த ஒரு நல்ல ஆன்மாவின் துடிப்பு ஆயுத முனையில் அடக்கப்பட்டிருக்கிறது. தேசத்தை நேசிப்பவர்களுக்கு மரணத்தைப் பரிசாகக் கொடுப்பது காலாகாலமாக இங்கே நடந்து வருகின்ற தெனினும் ஜோசப் பரராஜசிங்கத்தின் பலியெடுப் பிற்கு ஆக்கிரமிப்பாளர்கள் குறித்த நாள், மக்களின் ஈடேற்றத்துக்காகத் தன்னைச் சிலுவையில் ஒப்புக் கொடுத்ததாகச் சொல்லப்படும் யேசுபாலன் பிறந்த நாள் டிசெம்பர் 25.

அவரின் பலியெடுப்பிற்கு அவர்கள் குறித்த இடம் தேவனின் திருச்சபை. தமிழினத்தின் அழிவொன்றையே நித்தம் உருப்போடுவதைத் தவிர வேறெந்த சிந்தனையும் அற்றவர்களால் தான் இந்த ஈனச்செயலை அதுவும் இவ்வாறான ஒரு நாளிற் செய்யமுடியும்.

இத்தகைய ‘விழி திறக்காதவர்களுக்காக ஜோசப் தன் விழிகளை மூடியிருக்கிறார்’.

மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் பத்திரிகையாளனாக ஆரம்பித்து தமிழபிமானத்தால் அரசியல்வாதியாகி, வடக்கிலும் கிழக்கிலும் இடம்பெறுகின்ற மனித உரிமை மீறல்களை வெளியுலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியவர் என்ற வகையில் அரசின் கவனிப்பைப் பெற்றார். தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்று தனது அரசியற் பணியை ஆரம்பித்து ஆயதப்போராட்டம் முனைப்புப் பெற்ற காலம்வரை பல தசாப்தங்களைக் கண்டவர்.

நெருக்கடியான சூழலில் ஆங்கிலப் புலமை வாய்ந்த ஜோசப்பின் குரலை நிறுத்துவது சம்பந்தப்பட்டவர்களுக்கு மிகமிக அவசியமானதொன்றாக இல்லாவிடின் கிறிஸ்மஸ் தினத்தையும் புனித மரியாள் தேவாலயத்தையும் கொலைக்காகத் தேர்வு செய்திருக்கமாட் டார்கள். ஒரு நாடாளுமன்ற ஜனநாயக வாதியாகவும் மனித உரிமைகள் வாதியாகவும் பார்க்கப்பட்ட ஜோசப் பரராஜசிங்கம் ஐயா படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக உலக நாடுகளோ, சர்வதேச அமைப்புகளோ அனுதாபம் கவலையை மட்டுமே வெளியிட்டது. நீதிக்காக செயற்படவில்லை.

ஜனநாயகப் பண்புகளுக்கமைய நாடாளுமன்றம் சென்று அடிவாங்கிய வரலாறு தமிழினத்துக்கு நிறையவே உண்டு. காலிமுகத்திடலில் அமைதியாகக் கூடிய சத்தியாக்கிரகிகள் மீது தடியடிப்பிரயோகம் செய்த வரலாறைக் கொண்ட தமிழ்த் தேசிய மக்கள் பிரதிநிதிகள் 2004 தொடக்கம் 2009, வரை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாமனிதர் ஜோசப்பரராஜசிங்கம் உட்பட மாமனிதர் ரவிராஜ், மாமனிதர் சிவனேசன் ஆகிய மூன்றுநாடாளுமன்றஉறுப்பினர்கள் சுட்டுக்கொலைசெய்யப்பட்ட வரலாறு இலங்கையின் ஆட்சி எப்படிப்பட்டது என்பதை சர்வதேசம் புரியவேண்டும்.

இவ்வாறான மாமனிதர்களுடைய படுகொலை மூலம் மீள அரங்கேறியுள்ளன. மணலுள் தலை புதைத்த தீக்கோழிகளாய் உண்மையான களநிலையைக் காணமறுக்கும் அல்லது மறக்கும் சர்வதேச அபிப்பிராயம் குறித்த கவலைகளை ஒதுக்கிவிட்டு மண்ணுக்காய் மரித்தவர்களின் அபிலாஷைகளைக் கணக்கிலெடுத்து முன்நகர்வதே நாம் அவர்களுக்குச் செய்யும் இதயபூர்வமான அஞ்சலியாகும். - என்றுள்ளது.

## எழுத்தாளர், சமூக சேவகர் ....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

**முட்கம்பி வேலிக்குள்**
**முகமிழந்து போன நிலை**
**நெட்டுயிர்த்து நின்று**
**நிழல் தந்து எமைக்காத்த**
**நெய்தல் நிலமே நீயின்று**
**நெருக்கடிகள் மத்தியிலே**
**முட்கம்பி வேலிகளால்**
**முகமிழந்து நிற்பது ஏன்**
**எத்தனையோ நூறாண்டு**
**எம்மக்கள் ஆண்டு வந்த**
**ஏற்றமிகு கடற்பரப்பு**
**முட்கம்பி வேலிக்குள்ளா?**
**பண்பாடிப் பாஇசைத்து**
**பாய் தொடுத்துப் படகு விட்டு**
**முத்துக்குளித்து முறுவலித்த நாம்**
**அடக்கு முறைக்காளாகி**
**அல்லல்படும் காட்சியிது**
**யாழ்பாடிப் பரிசு பெற்ற**
**யாழ் நகரின் கரைகளின்று**
**பாழ் நிலமாய்ப் புதர் மண்டி**
**பகைப்புலமாய்க் காணுகின்றோம்**
**காலை முதல் மாலைவரை**
**கங்குலிலும் சுதந்திரமாய்**
**கடல் வளங்கள் சேர்த்தெடுத்து**
**கரைகுவித்த காலம் போய்**
**கட்டுண்டு தடம்மாறி**
**தாய் மண்ணில் அநாதைகளாய்**
**தவிக்கின்ற நிலையின்று**
**சொந்த மண்ணை நாமிழந்தோம்**
**சுதந்திரமும் எமக்கில்லை.**

என்று அழகிய சந்தத்தோடும் இயங்கியல் வாழ்வியலோடும் இனப்பற்றோடும் காலச்சூழலை கவிதையாக்கி இருக்கிறார் பிரான்சிஸ் ஜோசப் அவர்கள்.

- இந்த ஒரு கவிதை போதும் அவர் மக்கள் மீதும், இந்த மண்மீதும் தான் வசிக்கும் ஊர்மீதும் கொண்ட பற்றும் பாசமும் காண அருள்புரிவாய் நாவாயூர் நாயகியே என்ற நீண்ட கவிதையில்

**பூவுலகைப் படைத்துத் தம் புண்ணியனின் தாயாய்**
**புவியனைத்தும் போற்ற பேரரசியாய் விளங்கும்**
**பரலோகமாதாவே மனுக்குலத்தின் தாயே**
**வானவர்கள் புடைசூழ்ந்து வாழ்ந்துரைக்க**
**வல்ல உன் திருவுடலைத் தாங்கி வானகம் சென்றவளே**
**மண்ணோடு விண்ணும் வியந்து போற்றுகின்ற**
**மாதாவாய் எம்மண்ணில் வீற்றிருந்து**
**குறைதீர்த்துக்குணமளித்துக் காப்பவளே**
**கோடி நன்மை நாமடைந்தோம் அம்மா உன்னால்**
**கார்கொண்ட போர்மேகம் கலைய வைத்தாய்**
**கவலையின்றி மீண்டும் நாம் சொந்த மண்ணில்**
**களிப்புடனே கால்பதிக்கக் கருணை செய்து**
**காவலியாய் நீயிருந்து அருள்பாலித்தாய்**
**களிப்புடனே நாம் கண்ட அமைதி நிலை**
**அற்றழிந்து போய்விடுமோ .. ஏங்குகின்றோம்**
**பட்டதுயர் போதுமம்மா இனியும் படாதபடி**
**வல்வினையும் வாழ்வியலின் சீரழிவும்**
**மூண்டெரிய முனைகின்ற போர் நெருப்பும்**
**முற்றாக வுனை நல் அமைதி காண - வேண்டும்**

என வலியுறுத்தி பாடிப்பரவுகின்றார் .

சிறந்த சொல்நெறியும் ,செல் நெறியும் கொண்ட தமிழ் மணக்கும் வரலாற்று தடயங்களை எழுத்து வடிவில் நம் சந்ததிக்கு வழங்கி இருக்கும் பிரான்சிஸ் ஜோசப் அவர்கள் தமிழுலகிற்கும் ,யாழ்மண்ணின் வரலாறுசொல்லும் எழுத்து உலகிற்கும் என்றுமே முதன்மையானவர்.

Merry Christmas

# கடவுள் என்றும் நம்மோடு இருக்கின்றார் என்ற உண்மையை கிறிஸ்து பிறப்பு உணர்த்துகிறது!

**யாழ்.ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் கிறிஸ்மஸ் வாழ்த்து**



2021ஆம் ஆண்டின் கிறிஸ்து பிறப்பு பெருவிழா இன, மத, நிற, மொழி வேறுபாடின்றி உலகம் முழுவதிலும் கொண்டாடப்படும் இவ்வேளை முதலில் பாலகன் இயேசுவின் அன்பும் அருளும் ஆசீரும் என்றும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக என வாழ்த்துகிறோம்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை. அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு -

வாக்கு மனிதனானார். நம்மிடையே குடிகொண்டார் (யோவான் 1:1 - 14) என யோவான் நற்செய்தியாளர் கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற உண்மையைத் தெளிவுபடுத்துகிறார். கடவுள் என்றும் நம்மோடு இருக்கிறார் என்ற இந்த உண்மையைச் சிறப்பாக உணர்த்தும் காலம் கிறிஸ்து பிறப்பு விழா காலமாகும்.

கடவுள் என்றும் நம்மோடு இருக்கின்றார் என்ற இந்த உண்மையையும் கிறிஸ்து பிறப்பின் ஒளியையும் மகிழ்வையும் நம்பிக்கையையும் எமது எந்தத் துன்பமான அல்லது இக்கட்டான அனுபவமும் எதுவும் என்றும் ஒருபோதும் குறைத்துவிட முடியாது.

நீங்கள் உங்கள் வீடுகளிலும் பொது இடங்களிலும் அமைக்கும் கிறிஸ்து பிறப்பைச் சித்திரிக்கும் கிறிஸ்மஸ் குடிலும் அதனோடு இணைந்த கிறிஸ்மஸ் மரமும் சோடினைகளும் கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற உண்மையான நம்பிக்கையின் அடையாளங்களாக அமையட்டும்.

இந்த அடையாளங்களின் வெளி அர்த்தத்தை தாண்டிச் சென்று அவற்றின் வழியாக வெளிப்படுத்தப்படும் இறை இருப்பையும் இறை அன்பை மனமகிழ்வையும் உங்கள் மனதுகளில் முழுவதுமாக உணர்ந்து இயன்றவரை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.

இன்றைய இக்கட்டான நிலையில் உங்களால் இயன்ற வரை இயலாமையில் வாடுவோர் - தேவையில் இருப்போர் - துன்பத்தை அனுபவிப்போர் - வைத்திய சாலையில் துன்பப்படுவோர் - சிறைச்சாலைகளில் வாடுவோர் போன்ற அனைவருக்கும் அன்புக்கரம் நீட்டுங்கள்.

இந்த பெருவிழாவின் போது உலகம் முழுவதிலும் பல்வேறு மொழிகளிலும் பாடப்படும் ஒரே இறைவார்த்தை உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக. உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக என்பதாகும் (லூக்காஸ் 2:13 - 14) உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக என்ற வார்த்தைகளை எமதாக்கி வாழ அழைப்பு விடுத்து இறையாசீருடன் கிறிஸ்மஸ் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம். - என்று தெரிவித்துள்ளார்.



# அமைதி மற்றும் அன்பின் அடையாளத்தை ஜேசு பாலகனின் பிறப்பு உணர்த்திநிற்கிறது!

**பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்து**



அமைதி மற்றும் அன்பின் அடையாளத்தை இப்பூவுலகில் விட்டுச் சென்ற இயேசு கிறிஸ்துவின் பிறப்பை நத்தார் நினைவூட்டுகிறது. கொவிட் தொற்று நிலைமைக்கு மத்தியில் வீழ்ச்சியடைந்த உலகை மீள புத்துயிர் பெறச் செய்வதுடன், நம்பிக்கை நிறைந்த எதிர்பார்ப்புகளுடன் நத்தார் தினத்தை அர்த்தமுள்ளதாக மாற்றுவது உங்களுடைய பொறுப்பாகும்.

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது நத்தார் தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

இறைவனின் அன்பும், மனித கண்ணியமும் மனிதநேயத்தை அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்துக்கு நம்பகமான அடித்தளமாக அமைந்தன.

பெத்லஹேமில் மாட்டுத் தொழுவத்தில் பிறந்த இயேசு கிறிஸ்து, இவ்வுலகை ஸ்ரீதார்த்தமாக நோக்குவதற்கு அவரது பிறப்பு முதலே முன்மாதிரியாகத் திகழ்ந்தார்.

நல்லுள்ளம் படைத்தவர்கள் அமைதியைப் பகிர்ந்துக் கொள்வார்கள். தம் மீது வெறுப்பு கொண்டவர்கள் மீதும் அன்பு காட்டுபவர்களாகத் திகழ்வார்கள். அன்பு, அமைதி மற்றும் சகோதரத்துவம் ஆகியவற்றின் பொருள் உணர்ந்து தமது வாழ்க்கையை உயிர்ப்பித்துக் கொள்வர்.

சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட மக்களை விடுவிக்கவும், இவ்வுலகில் சிறந்த சமுதாயத்தை உருவாக்குவதற்காகவுமே இயேசு கிறிஸ்து தனது முழு வாழ்நாளையும் அர்ப்பணித்தார்.

அந்த வெளிப்பாட்டை சரியான முறையில் உணர்ந்து, இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை முறைக்கு ஏற்பதங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதன் மூலம் ஒவ்வொரு கிறிஸ்தவரின் வாழ்க்கையும் ஒளிமயமாகும்.

கொவிட் தொற்று நிலைமைக்கு மத்தியில் வீழ்ச்சியடைந்த உலகை மீள புத்துயிர் பெறச் செய்வதுடன், நம்பிக்கை நிறைந்த எதிர்பார்ப்புகளுடன் நத்தார் தினத்தை அர்த்தமுள்ளதாக மாற்றுவது உங்களுடைய பொறுப்பாகும்.

'நட்சத்திர ஒளியும், கிறிஸ்துவின் பிறப்பும், உலகை உயிர்ப்பிக்கும்' எனும் தொனிப்பொருளில் அலங்கரிக்கப்படும் இம்முறை நத்தார் தினம் ஒட்டுமொத்த உலகவாழ் மற்றும் இலங்கை வாழ் கிறிஸ்தவ மக்களுக்கு அர்த்தமுள்ள மற்றும் மகிழ்ச்சியான நாளாக அமைய வேண்டும் என பிரார்த்திக்கிறேன்.

- என்றுள்ளது.

# கருணை மைந்தன் இயேசு அவதரித்த நாளில் தேசமெங்கும் நித்திய ஒளி உண்டாகட்டும்!

**கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் வாழ்த்து**



அகிலத்தின் ஒளியாக கருணை மைந்தன் இயேசு பிரான் அவதரித்த நத்தார் தினம் தேசமெங்கும் நித்திய ஒளி உண்டாகி நீடித்து நிலவும் நாளாக கனியட்டும் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மேலும் அவரது நத்தார் வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு -

நான் என்றும் இடையறாது உங்களுடனேயே இருப்பவன். அக்கிரமங்களில் நீங்கள் அகப்பட்டு தவித்த போது, நீங்கள் சுமந்த துயரச்சிலுவைகளை நாமும் சுமந்தவர்கள்.

இருளில் நீங்கள் நடமாடாமல் இருக்கவும், உங்கள் வாழ்விடங்கள் தோறும் நித்திய ஒளி உண்டாகவும், எழிலார்ந்த உரிமை வாழ்வை உங்களுக்கு உருவாக்கிக் கொடுக்கவும், நாம் வகுத்த கட்டாய கட்டளைகளோடு இன்னமும் உங்கள் மத்தியில் நிற்பவர்கள் நாம்.

நான் சொல்லும் கருத்துக்கள் சத்திய வாக்குகள் போன்றவை. வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் நித்திய சமத்துவ சமாதானத்தை எமது மண்ணில் உருவாக்கும் எனது சிந்தனைகள் ஒருபோதும் ஒழிந்து போகா,. ஏனெனில்,... அவை நடைமுறைச் சாத்தியமானவை.

நாம் தோற்றுப்போன இன சமூகமல்ல, மாறாக கற்பாறைகளில் விதைக்கப்பட்ட தவறான வழிமுறைகளே இங்கு தோற்றுப்போனவை. யுத்தம் தந்த இரத்தப் பலிகளில் இருந்து நீங்கள் மீண்டு நிமிரவும் சாம்பல் மேட்டில் இருந்து உங்கள் சமாதான சக வாழ்வு திரும்பவும் காலமொன்று கனிந்து வந்தது போல்,... எமது பூமியில் இன்று நீங்கள் எதிர்கொள்ளும் எல்லா இடர்களும் இல்லாதொழிந்து போகும்,.. துயருறுவோர் ஆறுதல் பெறுவர்,. கனிவுடையோர் தமக்கான தேசத்தை உரிமை சொத்தாகுவர்,.. நோய் பிணிகள் இல்லாத, வறுமை, பஞ்சம், பசி, பட்டினி இல்லாத, யாரும் யாரையும் அடிமை கொள்ளாத புதியதொரு சமாதான இராச்சியத்தையே நாம் தொடர்ந்தும் விரும்புவோம்.

சத்தியத்தின் வழியில் சமவுரிமையை நேசிக்கும் எங்களை நேசியுங்கள்., நீங்களும் நேசிக்கப்படுவீர்கள். எல்லா இடங்களிலும் ஒளி உண்டாகும். எமது சாத்தியமான வழிமுறையில் நீதியை தேடுங்கள், நீங்கள் கண்டடைவீர்கள்.

அன்பும் கருணையும் அவனியை ஆளட்டும்! இவ்வாறு தனது நத்தார் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருக்கும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஒவ்வொரு இல்லங்கள் தோறும் நாளைய நம்பிக்கையோடு மகிழ்ச்சி நிலவட்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டால் மீண்டும் தொழிற்சங்கப் போராட்டம் வெடிக்கும்!




## அரசுக்கு ஜோசப் ஸ்டாலின் கடும் எச்சரிக்கை

அதிபர் – ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பாக அரசு வழங்கிய வாக்குறுதிகளை உரிய முறையில் நிறைவேற்றாவிட்டால் நாடளாவிய ரீதியில் பாரிய தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

அரசு வாக்குறுதி அளித்த முறைமைக்கு அமைவாக எதிர்வரும் ஜனவரி மாதம் 20ஆம் திகதி அதிபர் –ஆசிரியர்களுக்கு நிலுவைக் கொடுப்பனவை சம்பளத்துடன் இணைக்காவிட்டால் பாரிய தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்படும்.

அதிபர் – ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அரசு அடுத்த வருடத்துக்கான வரவு – செலவுத் திட்டத்தில் 3 கோடி ரூபாவை ஒதுக்கியது.

எனினும், அதற்கான சுற்றுநிருபம் இதுவரை வெளியிடப்படவில்லை. இந்த விடயத்தில் எமக்குப் பாரிய சந்தேகம் உள்ளது. இது தொடர்பில், கல்வி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்தஅதிகாரிகளிடம்தொடர்ச்சியாகக் கலந்துரையாடி வந்தாலும் இதுவரை ஒரு தீர்க்கமான தீர்மானம் வழங்கப்படவில்லை. அமைச்சரவை உபகுழுவால் அனுமதிக்கப்பட்டு அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிலுவைக் கொடுப்பனவையே நாம் கோருகின்றோம்.

நாடளாவிய ரீதியில் 30 ஆயிரம் ஆசிரியர்களுக்குத் தட்டுப்பாடு காணப்படுகின்றது. மத்தியமாகாணத்தில் மட்டும் 2 ஆயிரத்து 800 ஆசிரியர்களுக்குத் தட்டுப்பாடு காணப்படுகின்றது எனத் தெரிவித்துள்ளனர்.







# எரிபொருள்களின் விலை அதிகரிப்பை எதிர்த்து இரத்தினபுரியில் போராட்டம்

இரத்தினபுரி நகரில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை) மக்கள் விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில் மாபெரும் போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

மேற்படி போராட்டம் எரிபொருளில் விலை அதிகரிப்பு மற்றும் விலைவாசிகள் அதிகரிப்புக்கு எதிராக நடைபெற்றது.

இந்தப் போராட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் இரத்தினபுரி மாவட்ட தலைவர் சாந்த பத்மகுமார மற்றும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் உபதலைவர் சுந்தரலிங்கம் பிரதீப், முன்னாள் நாடாளுமன்ற வேட்பாளர் மாணிக்கம் அசோக்குமார் உட்பட நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# கிழக்கு முஸ்லிம் அபிலாஷைகளுக்கு எதிரானதே 13ஆம் திருத்தச் சட்டம்

## முபாறக் அப்துல் மஜீத் குற்றச்சாட்டு



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் சமர்ப்பிக்கப்படவுள்ள கடிதத்தின் தலைப்பு '13 ஆம் திருத்தத்தை அமுல்படுத்தக் கோருதல்' என இருந்த நிலையில் தற்போது அது 'தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதும் இலங்கை இந்திய ஒப்பந்தமும்' என மாற்றப்பட்டாலும் அனைத்தும் ஒரே பொருளைக் கொண்டதாகவும் கிழக்கு முஸ்லிம்களின் அபிலாஷைகளுக்கு எதிரானதுமாகும் என ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்க் கூட்டமைப்பு தலைமையிலான கட்சிகளும், ரவூப் ஹக்கீமும் இணைந்து தயாரித்துள்ள இந்த வரைவு என்பது கிழக்கு மாகாணத் தமிழ் மக்களிடமோ அல்லது இலங்கை வாழ் முஸ்லிம்களிடமோ கேட்காமல் சர்வாதிகாரமாகத் தயாரிக்கப்பட்ட ஒன்றாகும்.

கிழக்கில் அதிக வாக்குகள் கொண்டனவாக முஸ்லிம் காங்கிரஸ் இருந்தாலும் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சித் தலைவர்களுக்கு மாற்றமாக உள்ள நிலையில் ரவூப் ஹக்கீம் மேற்படி ஆவணத்தில் கையொப்பம் இடுகின்றமை கிழக்கு முஸ்லிம்களின் ஒப்புதலாக அமையாது.

அது மட்டுமல்லாது மேற்படி ஆவணம் கிழக்கைச் சேர்ந்த அரசியல் கட்சித்தலைமைகளுடன் ஆலோசனை செய்யாமல் தயாரிக்கப்பட்ட சர்வாதிகார வரைவாகும்.

இந்த வரைவு கிழக்கு முஸ்லிம்களுக்கும், நாட்டின் இறைமைக்கும் அச்சுறுத்தலாகும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும்.

ஆகவே, இனப்பிரச்சினைக்கான தீர்வில் வடக்கு, கிழக்கை இணைக்கக் கோரும் எத்தகைய தீர்மானத்தையும் எமது கட்சி நிராகரிக்கிறது.

தற்போது உள்ளது போல் வடக்கும், கிழக்கும் பிரிந்துள்ளதை ஏற்று முஸ்லிம்களுக்கான அதிகாரத்தையும் ஏற்று ஜனநாயக ரீதியிலான தீர்வை முன்வைக்க தமிழ்க் கூட்டமைப்பு கிழக்கை தலைமையாகக் கொண்ட செயற்பாட்டில் உள்ள கட்சிகளுடன் உரையாடிய பின்பே எத்தகைய வரைவையும் முன்வைக்க வேண்டும். என்று தெரிவித்துள்ளார்.

# 21ஆம் நூற்றாண்டில் வாகன இறக்குமதிக்கு தடை விதித்துள்ள ஒரே ஒரு நாடு இலங்கை

## ராஜித தெரிவிப்பு



21 ஆம் நூற்றாண்டில் வாகன இறக்குமதியைத் தடை செய்த ஒரே ஒரு நாடு என்றால் இலங்கையை குறிப்பிட முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போது வாகனம் என்பது ஆடம்பரப் பொருள் அல்ல. அத்தியாவசியப் பொருளாகும். மக்களுக்கு இவ்வாறானா அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதி தடையாகியுள்ள நிலையில் மக்கள் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளது.

எமது நாட்டின் வாகன இறக்குமதி மீது விதிக்கப்படும் வரி வீதம் மிகவும் அதிகம். வாகனத்தின் விலையை விடவும் நூற்றுக்கு 200 தொடக்கம் 300 வீதம் வரி விதிக்கப்படுகின்றது.

இதனால் தான் நாட்டில் வாகனங்களுக்கான விலை அதிகமாகக் காணப்படுகிறது. ஐரோப்பிய நாடுகளில் வாகனங்களுக்கான விலை மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது. அந்த நாடுகளுடன் ஒப்பிடும் போது குறித்த வரி விதிப்பின் காரணமாக எமது நாட்டில் நான்கு மடங்கு விலை அதிகமாகக் காணப்படுகின்றது. தற்போது அந்த விலை அதிகரிப்பை விட வாகன இறக்குமதி தடையின் காரணமாக பல மடங்கு அதிகரித்துள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

# நண்பரிடம் வாகனம் கொள்ளை விமானப் படைச் சிப்பாய் கைது

கொழும்பு, பம்பலப்பிட்டியில் முகப்புத்தகம் ஊடாக கண்டுபிடித்த நண்பனிடம் விமானப்படை சிப்பாய் ஒருவர் மோட்டார் வாகனத்தை கொள்ளையடித்துள்ளார்.

குறித்த நண்பனை மிகவும் நுட்பமாக பம்பலப்பிட்டியவுக்கு வரழைத்து அவரது 28 லட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் வாகனத்தைத் கொள்ளையடித்துச் சென்று வாடகை வாகனமாக மாற்றிய விமானப்படையின் முன்னாள் சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த சந்தேக நபர் மோட்டார் வாகனத்தில் காட்சிப்படுத்திய போலி தகடு, போலி ஆவணங்கள், அதனை தயாரிக்கப் பயன்படுத்திய பொருள்கள் மற்றும் இயந்திரங்கள் அனைத்தும் பொலிஸாரின் பொறுப்பில் எடுக்கப்பட்டுள்ளன.

கடந்த 4 வாரத்துக்கு முன்னர் முறைப்பாட்டாளர் மற்றும் சந்தேக நபர் முகப்புத்தகம் ஊடாக அறிந்து கொண்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முறைப்பாட்டாளரின் மகனை டுபாய் நாட்டுக்கு தொழிலுக்காக அழைத்து செல்ல உதவுகிறேன் எனக் கூறி இந்த கொள்ளைச் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த தொழில் விடயமாக பேசுவதற்காக பேராதனையில் இருந்து சந்தேக நபரும் பாதிக்கப்பட்ட நபரும் பம்பலப்பிட்டிக்கு மோட்டார் வாகனத்தில் வருகை தந்துள்ளனர்.

இதன் போது உரிமையாளரை ஓர் இடத்தில் இருக்குமாறு கூறிவிட்டு சந்தேக நபர் வாகனத்தை எடுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

இந்த நிலையிலேயே மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டினையடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## தமிழ்ப் பேசும் தரப்புகளின் ஒருமித்த நிலைப்பாட்டில் சிக்கல்

# 13ஐ ஒட்டி நெருக்கடி

# விலக மனோ பின்னடிப்பு! ஏற்பதற்கு தமிழரசு மறுப்பு!



யாழ்ப்பாணம், டிசெம்பர் 24

தமிழ்பேசும்தரப்புகளின்தலைவர்கள் ஒன்றுபட்டு தமது அபிலாஷைகளை வெளிப்படுத்தும் ஆவணம் ஒன்றை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்ப வேண்டும் என்ற முனைப்பில் ஆரம்பிக்கப்பட்ட, கணிசமான அளவு முன்னேற்றம் கண்ட முயற்சி பெரும் பின்னடைவை இப்போது எதிர்கொண்டுள்ளது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்தக் கோருவது என்ற ஆரம்ப நிலைப்பாட்டில் இருந்து விலகி வருவதற்கு இணங்கிய தமிழர் முற்போக்கு முன்னிணியின் தலைவர் மனோ கணேசன், மீண்டும் 13 ஐக் கட்டிப் பிடிக்க முயல்கின்றமையை அடுத்தே இந்த நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதேசமயம் 13ஐ மீண்டும் வலியுறுத்துவதற்கு இணங்கவே முடியாது என்ற திட்டவட்டமான நிலைப்பாட்டைத் தமிழரசுத் தலைவர்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் திரும்பவும் வலியுறுத்தி, அதனை உடும்புப்பிடியாக வெளிப்படுத்தியுள்ளனர்.

இதனால் விவகாரம் நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்றது.

### மனோவின் நிலைப்பாடு

இது தொடர்பில் தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் அறிக்கை ஒன்றை தமிழ் முற்போக்கு முன்னணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. மேற்படி 21 ஆம் திகதிக் கூட்டத்தில் பங்குபற்றிய கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு அனுப்பி வைத்திருக்கின்றார்.

அதில் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு:-

டிசெம்பர் 21 ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலை அடுத்து அனைவருக்கும் அனுப்பப்பட்டுள்ள வரைவுகள் தொடர்பாக எனது பதிலுரை இது.

அன்பின் தலைவர்கள், பொது செயலாளர்கள், கட்சி பிரதிநிதிகள், கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும்.

21 ஆம் திகதிய கூட்டத்திற்கு பிறகு எனது முதற்கட்ட அவதானங்கள்:-

நவம்பர் முதல் வாரத்தில் நாம் யாழ். திண்ணையில் ஆரம்பித்த செயற்பாட்டில் இருந்து நாம் விலகிச் செல்கிறோம் என நான் அச்சப்படுகிறேன். எனது புரிதலின் படி, எமது அசல் நோக்கங்கள், 13ஆம் திருத்தத்தை பாதுகாத்து அமுல்படுத்தும்படியும், இலங்கை தமிழ் பேசும் மக்கள் இன்று எதிர்கொள்ளும் முக்கியமான பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தும்படியும் புதுடில்லியை கோருவது என நினைக்கிறேன்.

காஷ்மீர் முஸ்லிம் சுயநிர்ணயக் கோரிக்கையை கொண்ட போராட்டத்தை காஷ்மீரத்தில் இந்தியா ஏற்கனவே எதிர்கொள்கிறது. ஜம்மு, காஷ்மீர் இணைப்பை அது துண்டித்து விட்டது. இந்திய அரசமைப்பில் காஷ்மீரத்துக்கு இருந்த விசேட சட்ட ஏற்பாட்டை நீக்கி, காஷ்மீர் மாநில அரசு அனுபவித்த அதிகாரங்களை மீள பெற்றுக்கொண்டது. அனைத்தும் இலங்கையின் வடக்கு கிழக்கு நடப்பை போன்றவைகள் ஆகும். இவை பற்றிய மாறுபட்ட அபிப்பிராயங்கள் இருக்கலாம். ஆனால், இவைதான் இன்றைய இந்திய அரசின் கொள்கைகள்.

ஆகவே, இந்தியாவை நாம் கோர/அழைக்க வேண்டுமானால், கவனமாக (தந்திரமாக....), பி.ஜே.பி. அரசை தர்ம சங்கடத்துக்குள் தள்ளாமல் அழைக்க வேண்டும்.

எமது ஆரம்ப நோக்கங்களின் படி, நாம் இந்தியாவை, அவர்களது கடப்பாட்டை அவர்களுக்கு ஞாபகப்படுத்தி, அவர்களது நல் அதிகாரத்தை (இராஜதந்திர சொல்லாடல்..) பயன்படுத்தி, 13ஐ முழுமையாக அமுல் செய்ய, உள்ளே இழுக்க விரும்பினோம்.

13 எமக்கான அரசியல் தீர்வு அல்ல என்பதும், இந்திய ஒன்றிய மாநிலங்களின் அதிகார வரம்பிற்கு அப்பால் சென்று, எமக்கு சமஷ்டியை பெற்று கொடுக்க, இந்தியாவை அழைக்க முடியாது என்பதும் எனக்குத் தெரியும். எங்கள் சச்சரவுகளை பற்றி பல பக்கங்களில் நாம் விவரணமாக எழுதலாம். ஏற்கனவே தளர்ந்து போய், விரக்தியடைந்துள்ள, எமது மக்களுக்கு கனவுலக நம்பிக்கைகளை நாம் கொடுக்கலாம். ஆனால், சமஷ்டிக்கான ஜனநாயக போராட்டங்களை நாம் இங்கே எமது மண்ணில், நாம்தான் முன்னெடுக்க வேண்டும். நமோவும், பைடனும் உள்ளே வரமாட்டார்கள்.

முடியுமானால், உலகில் வேறு எங்கும் சென்று, தலையீடுகளை கேட்டு பார்க்கலாம். ஆனால், அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், கனடா, ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் எஞ்சியுள்ள முன்னாள் இணைத்தலைமை நாடுகள் எவையும், இந்தியாவை மீறி அல்லது கடந்து ஓர் அடி எடுத்து வைக்க மாட்டார்கள். இதில் நான் மிகத்தெளிவாக இருக்கிறேன்.

எமது ஆவண தலைப்பை 'இந்திய - இலங்கை ஒப்பந்தம் 1987 இலங்கை அரசமைப்பின் 13ஆம் திருத்தம் முழுமையாக அமுலாக்கல்' என்பதிலிருந்து, 'ஆட்சி அதிகார பகிர்விற்கான தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகள் மற்றும் இந்திய - இலங்கை ஒப்பந்தம்' என மாற்றியுள்ளோம்.

இதை நாம் ஏற்றுக்கொண்டாலும் கூட, இங்கே அதி முக்கியமான 13ஆம் திருத்தம் தொடர்பான சொல்லாடலை நாம் அகற்றி விட்டோம்.

இந்த தலைப்பு மாற்றத்தை ஏற்றுக் கொண்டாலும் கூட, ஏறக்குறைய ஒரு பக்க கடிதம், ஏழு பக்கங்களாகி விட்டது. இந்தக் கடித ஆக்க முறையை சிலாகித்து, அதன் உள்ளடக்கத்துடன் பெரும்பாலும் உடன்பட்டாலும், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் என்ற முறையில் நான் ஒரு பிரச்சினையை எதிர்கொள்கிறேன்.

இக்கடிதத்தில் வடக்கு - கிழக்கு கோணத்தை தவிர, வேறு எவரைப் பற்றியும் குறிப்பிடப்படவில்லை. தமிழ்த் தேசியப் பிரச்சினை என்ற ஒரே பிரச்சினைக்குள் எல்லாப் பிரச்சினைகளையும் உள்ளடக்கும் பாரம்பரிய சிந்தனை தொடர்ந்து, அந்த அடிப்படையிலேயே கௌரவ. நரேந்திர மோடியை கோருவதாக முடிகிறது. அனைத்து தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளையும், இந்த தமிழ் தேசிய பிரச்சினை என்ப தற்குள் உள்ளடக்குவதனுடன், ஏனையோரின் பிரச்சினைகள் விவரிக்கப்படுவதை மேலாதிக்க போக்கில் தவிர்க்கிறது.

பின்வரும் இரண்டு சாத்தியங்களை பாருங்கள்:

(அ) வடகிழக்கு தமிழ், மலையக தமிழ், முஸ்லிம் மக்கள் ஆகிய நாம் அனைவரும், இந்த செயற்பாட்டில் ஒன்றிணைய வேண்டுமென்றால், மலையக வரலாறு, அவதானங்கள் (முஸ்லிம் கோணம் உட்பட...) உள்வாங்கப்பட்டு, இது மீள எழுதப்பட்டு, கட்டமைக்கப்பட வேண்டும்.

(ஆ) வடக்கு, கிழக்கு தலைவர்கள் மாத்திரம் கையெழுத்திட்டு இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதுவார்கள் எனில், அது சரியாக இருக்கும். அவ்வாறாயின், எமது நல்வாழ்த்துக்கள் எப்போதும் உங்களுக்கு இருக்கும்.

இப்போது நாம் மலையக தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பான ஆவணத்தை தயாரிக்கிறோம். ஆனால், இந்த கடிதத்தில் மலையக, முஸ்லிம் அபிலாஷைகள் இணைக்கப்படுமாயின், பிரதமர் மோடிக்கு எழுதப்படும் இந்த கடிதம் 10 பக்கங்களையும் தாண்டும்.

அடுத்த விவகாரம், கடிதத்துடன் இருக்கின்ற, தமிழ்ப் பேசும் மக்கள் எதிர் நோக்கும் ஏழு முக்கிய பிரச்சினைகள் அடங்கிய பட்டியல். கடந்த கலந்துரையாடலின் போது, இந்த பட்டியல் ஆவணத்தை ஒதுக்கி வைக்கும் ஒரு முயற்சி உருவாகி, அது பலத்த வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தியது. இந்த ஆவணம் பற்றிய, குறிப்பு கடிதத்தில் இல்லை. இந்த ஏழு பக்க கடிதம் மட்டுமே ஒரே ஆவணம் என்ற முயற்சியை ஒருபோதும் ஏற்க முடியாது. அது பிற்சேர்க்கையும் அல்ல. கடிதமும், ஏழு முக்கிய பிரச்சினைகள் பட்டியலும் சமமாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

ஏழு முக்கிய பிரச்சினைகள் பட்டியலின் தலைப்பு, இலங்கைத் தமிழ் பேசும் மக்களின், கவனத்தில் எடுக்க வேண்டிய பிரதான அவசர பிரச்சினைகள் என தலைப்பிட வேண்டும் என விரும்புகிறேன். - என்று உள்ளது.

### சுமந்திரனின் பதில்

இது குறித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் எம்.பியுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது அவர் கூறியவை வருமாறு:-

தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு கடந்த 20ஆம் திகதி கூடியது. தமிழ்க் கட்சிகளின் கூட்டத்தில் வழங்கப்பட்ட 2 ஆவது வரைவு அங்கு ஆராயப்பட்டது. அடுத்தநாள் 21 ஆம் திகதி நாம் கூட்டத்திற்குப் போன போது தமிழ்க் கட்சிகள் சார்பில் 3 ஆவது வரைவு தரப்பட்டது.

2 ஆவது வரைவை நாம் 20ஆம் திகதி ஆராய்ந்த போது 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தக் கோருவதே தலைப்பாகவும் விடயமாகவும் குறிக்கோளாகவும் அதில் இருந்தமையை அவதானித்தோம்.

அதற்கு இணங்க முடியாது என்பது தான் தமிழரசின் நிலைப்பாடு. ஆனால் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் ஓர் ஆவணத்துக்கு இணங்கி ஒப்பமிட தமிழரசு தயாராக இருந்தது. இருக்கின்றது. அதனால்தான் ஒரு மாற்று வரைவு செய்ய இணங்கப்பட்டது.

பழையதை - அவர்கள் தந்ததை - திருத்த முடியாது என்பதால் தான் நாம் வேறு ஒரு வரைவை ஆக்கினோம்.

21 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறையாக்கக் கோரும் கோரிக்கைக்கு நாங்கள் இணங்கி வர மாட்டோம் என்பதை சம்பந்தனும் மாவை சேனாதிராசாவும் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கூறினர்.

"என்னை வற்புறுத்தி - பலவந்தப்படுத்தி - என் கையெழுத்தை நீங்கள் பெறமுடியாது. 13 ஆவது திருத்தத்துக்கு நாங்கள் ஏன் இணங்க முடியாது என்பதை 1987 இலேயே கையெழுத்திட்டு பிரதமர் ராஜீவுக்கு கடிதமாக நான் வழங்கியிருக்கின்றேன். அதிலிருந்து நாம் விலகவே முடியாது. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் இருப்பவை சரியானவை. ஆனால் 13 ஆவது திருத்தம் அந்த ஒப்பந்தத்தில் உள்ள இலக்குகளை அடையவில்லை. அதுதான் எமது நிலைப்பாடு. ஆனால் அரசமைப்பில் இருப்பது 13 ஆவது திருத்தம்தான். அதை நீங்கள் முழுமையாக அமுல்படுத்துவதாயின் அமுல்படுத்துங்கள். அது அரசமைப்பில் உள்ளது. அதை செய்வது அவர்கள் கடமை. செய்யட்டும். ஆனால் இந்தியாவுக்கு அவர்கள் அளித்த வாக்குறுதி, 13 ஆவது திருத்தத்துக்கும் அப்பாலும் போய் அதிகாரப் பகிர்வை அர்த்தமுள்ளதாக்குவோம் என்பதாகும். அரசாங்கத் தலைவர்களே அதற்கு உறுதியளித்த பின்புலத்தில் - 34 வருடங்களுக்கு முன்னர் நாம் நிராகரித்த 13 ஐ மீளவும் வலியுறுத்துவோம் என நீங்கள் எதிர்பார்ப்பது தவறு. அதற்கு நாங்கள் இணங்கவே மாட்டோம்." - என்று அந்தக் கூட்டத்தில் சம்பந்தன் உறுதியாகத் தெரிவித்தார். அதையே தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசாவும் வலியுறுத்தினார்.



அதனால்தான் இந்த மாற்று வரைவு. அதை சமர்ப்பித்து நான் முழுமையாக வாசித்த பின்னர் மனோ கணேசன்தான் முதலில் கூறினார். "இது பரவாயில்லை, இதை நாம் ஏற்றுக் கொள்ளலாம்" - என்று.

"சில சில மாற்றங்களைச் செய்யலாம். முன்னைய வரைவுகளில் உள்ள சில வற்றை இதில் சேர்க்கலாம்" என்று அவரே கூறினார்.

எல்லோரும் அதனை ஏற்றுக்கொண்டு, கடைசியாக அவர்கள் சமர்ப்பித்த வரைவில் வரலாற்றுப் பின்னணி தொடர்பாக அவர்கள் குறிப்பிட்ட மூன்று பந்திகளை எடுத்து, எமது வரைவில் வரலாற்றுப் பின்னணி பற்றிய பந்திகளுக்குப் பதிலீடாகச் சேர்த்துக் கொள்வது என எல்லோருமாகத் தீர்மானித்தோம்.

ஆனால் உள்ளடக்கம், தலைப்பு, முடிவு மூன்றுமே '13 அல்ல' என்று தீர்மானிக்கப்பட்டது. எமது அபிலாஷை சமஷ்டி அடிப்படையிலான கட்டமைப்பு என்று அதில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றது. 13 ஆம் திருத்தத்துக்கு அப்பால் செல்வது குறித்து இலங்கை - இந்திய அரசாங்கங்கள் கூறியவை எல்லாம் எமது அந்தப் புதிய வரைவில் உள்ளடக்கப்பட்டுள்ளன. 13 அல்ல, 13க்கு அப்பால் செல்வது ஒரு தொடக்கப்புள்ளியாக இருக்க முடியும் என இந்தியா கூறியுள்ளது. அதையும் நாம் குறிப்பிட்டுள்ளோம். அப்படி நாங்கள் குறிப்பிட்டுள்ளமையால் ஆவணத்தின் தலைப்பு '13 ஐ நடைமுறைப்படுத்தக் கோருவது' என்று அமைவது தவறு என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆவண உள்ளடக்கத்துக்கு ஏற்ப தலைப்பு மாற்றப்பட்டது. மனோ கணேசன் உள்பட எல்லோரும் இணங்கித்தான் அந்தத் தலைப்பு இப்போதைய வடிவத்துக்கு மாற்றப்பட்டது.

பொருளும், தலைப்பும் மாற்றப்பட்ட பின்னரும் சில தின சரிகள் '13 ஆவது திருத்தத்தின் நடைமுறையாக்கத்துக்கான இணக்கம்' என்ற வாறாகச் செய்தி வெளியிட்டமையால் அதை ஒட்டி நான் ஒரு விசேட அறிக்கையை வெளியிட்டு நிலைமையைத் தெளிவுபடுத்தினேன்.

தலைப்பு, பொருள், விடயம், உள்ளடக்கம், குறிக்கோள் யாவையும் மாற்றப்பட்டுள்ளன என்று இப்போது மனோ கணேசன் கூறுவது உண்மை. அத்தகைய இணக்கம் அவருடன் சேர்ந்து அன்று எட்டப்பட்டது. அதுதான் அன்றைய முடிவு. அது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

ஆரம்பத்தில் தொடங்கிய விடயத்தில் இருந்து விலகுகிறோம் என அச்சப்படுவதாக அவர் இப்போது குறிப்பிட்டுள்ளார். அச்சப்

(12ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர் Kalaikkathir

## அரசை எதிர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நாடு தற்போதுள்ள நிலையில் அரச ஊழியர்களுக்கும் சம்பளம் குறைக்கலாமே தவிர அதிகரிக்க முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உரப் பிரச்சினையைப் பார்த்தால் யூரியாவைக் கொடுக்கலாம் என்ற நிலைப்பாடு உள்ளது. ஆனாலும், இயற்கைப் பசளையே சிறந்தது.

அடுத்து இப்போது பேசப்படும் விடயம் டொலர் பற்றாக்குறை. இந்தப் பிரச்சினைக்கு அடுத்த வருடம் தீர்வு கிடைக்கும்.

நாட்டில் வேலை செய்கின்ற அனைத்து ஊழியர்களுக்கும் இப்போது சம்பளம் குறைக்க வேண்டுமே தவிர அதிகரிப்பு இல்லை. அதற்காகப் போராட்டம் செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும்.

நமது நாட்டுக்கு இப்போது முக்கியமாகத் தேவைப்படுவது வெளிநாட்டு பங்களிப்பு.

எரிவாயு வெடிப்பு பிரச்சினைக்கு ஜனவரியில் தீர்வு கிடைக்கும் - என்றார்.

## தமிழ் பேசும் கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்பதை வலியுறுத்தும் விதத்தில் இது வரை மூன்று கட்டப் பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளன.

ரெலோவின் ஏற்பாட்டில் நடைபெறும் இதற்கான சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக்கட்சி, தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்., தமிழ் தேசியக் கட்சி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கான வழிமுறைகளில் ஓரங்கமாக, அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்குமாறு இந்தியாவிடம் ஒருமித்தக் குரலில் கோரிக்கை விடுப்பதற்கும், அதற்கான ஆவணத்தைத் தயாரிப்பதற்கும் ஆரம்பகட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில், தமது தரப்புக்கும் அழைப்பு விடுத்தால் அதில் இ.தொ.கா. பங்கேற்கும் என அதன் பொதுச்செயலாளர் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் நேற்றுமுன்தினம் பகிரங்கமாக அறிவித்திருந்தார். இவ்வாறான தொரு பின்புலத்திலேயே இ.தொ.காவுக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## வடக்கு மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

யின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போர் நிறைவடைந்த காலம் முதல் வடக்கு மீனவர்களின் துயரம் தொடர்கின்றது. படகுகள், உடைமைகள் எனப் பலவற்றை இழந்துள்ளனர்.

இலங்கை அரசும், கடற்படையும் இணைந்து திட்டமிட்டுத்தான் இந்த எல்லை மீறல்களை அனுமதிக்கின்றனர்.

இதன் நோக்கம் வடக்கு கரையோரப் பரப்புகளிலிருந்து மீனவர்களை அகற்றுவதே ஆகும்.

எமது மீனவர்களின் வளங்களை அழிக்கவே வேண்டும் என்று இந்திய மீனவர்களை இலங்கைக் கடல் பரப்புக்குள் கடற்படையினர் அனுமதிக்கின்றனர்.

அத்துடன் தமிழ் அமைச்சராக டக்ளஸ் தேவானந்தா இருந்துகொண்டு இதற்குத் துணை போகின்றார்.

அவர் அமைச்சராகப் பதவியேற்று இரண்டு வருடங்கள் நிறைவடைந்த நிலையில், இன்னமும் இந்திய மீனவர்களின் அத்துமீறல் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்கவில்லை .

மானமுள்ள தமிழராக இருந்தால் அவர் எப்பவோ பதவி விலகியிருக்க வேண்டும் - என்றார்.

## 13ஐ ஒட்டி...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி..)

படுவதில்லை.

அதுதான் நடந்திருக்கின்றது. அப்படி விலகாமல் தமிழரசு பழைய ஏற்பாட்டுக்கு இணங்காது.

அவருடைய இந்த நிலைப்பாடு பற்றிய மின்னஞ்சல் கிடைத்ததும் தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசாவுடன் நேற்றும் (வியாழனன்று), சம்பந்தன் ஐயாவுடன் இன்றும் (வெள்ளியன்று) இது குறித்து நான் விரிவாகப் பேசியுள்ளேன். இருவருமே 13ஐ முன்னிலைப்படுத்தி இந்த ஆவணத்தை தயார் செய்யவே முடியாது என்று கூறியுள்ளனர். ஏனெனில் தலைப்பு முக்கியம். உள்ளடக்கமும் 13 ஐ நடைமுறைப்படுத்துவது பற்றியதல்ல. ஆனபடியால் அது (13ஐ முன்னிலைப்படுத்தி) செய்ய முடியாது. வேறு ஏதும் விதமாக மொழி நடையைப் பாவித்து ஓர் இணக்கப்பாட்டிற்கு வர முடியுமானால் அதற்கு முயற்சிபுங்கள் என்று எனக்குக் கூறியுள்ளனர்.

13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதை வலியுறுத்தும் ஏற்பாட்டுக்கு தமிழரசு இணங்காது என்பதை இரண்டு தலைவர்களும் எனக்கு உறுதியாகத் தெளிவுபடுத்தியுள்ளனர்.

- இவ்வாறு சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

## அரசின் சலுகை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் அக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன்போது, ஜே.வி.பியுடன் இணைவது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் வெளியிட்டுள்ள அறிவிப்பு தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே எஸ்.பி. திஸாநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தயாசிறியின் கதைக்குப் பதிலளித்து அவரின் மனதை நோகடிக்க விரும்பவில்லை. சிரிப்புமட்டுமே வருகின்றது. கூட்டணி அரசு இருக்கும்போது, அதனிடமிருந்து எதையாவது பெற்றுக்கொள்ளப் பங்காளிகள் இவ்வாறு செயற்படுவது வழமை. அது தொடர்பில் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை - என்றார்.

## ஊடகவியலாள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அமைந்துள்ள தனது பெரிய தாயாரின் காணியில் மேற்படி பிரதேச சபையின் உப தலைவரின் உறவினரால் அமைக்கப்பட்ட சட்டவிரோத கூடாரத்தை அகற்றும்படி இவர் கூறியதற்கு பிரதேச சபை உபதலைவர் சவால் விடுத்துள்ளார்.

பின்பு ஊடகவியலாளர் சிவகுமாரன் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கும்படி உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் மத்திய மாகாண ஆளுநர், மாகாண பிரதான செயலாளர் ஆகியோருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அது உரிய அனுமதியின்றி அமைக்கப்பட்ட சட்டவிரோத கூடாரம் என்பது உறுதியாகவே நுவரெலியா மாவட்ட உள்ளூராட்சி துணை ஆணையாளர் அலுவலகத்தால் சட்ட விதிகளுக்கு அமைய இதை அகற்றும்படி கொட்டகலை பிரதேச சபைக்கு அறிவுறுத்தல் விடப்பட்டிருந்தது.

அதன்படி இந்த கூடாரத்தை டிசம்பர் மாதம் 20ஆம் திகதிக்குள் அகற்றும்படி கொட்டகலை பிரதேச சபையால் கடிதம் மூலம் பிரதேசசபையின் உறவினருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அவ்வாறு தற்காலிக கூடாரம் அகற்றப்படவில்லை.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் அவ்விடம் வந்த பிரதேச சபை உப தலைவர் உட்பட அவரது உறவினர்கள் பத்து பேர், ஊடகவியலாளருக்கு நேரடியாக அச்சுறுத்தல் விடுத்ததோடு இனி செய்திகள் எழுதுவதைப் பார்ப்போம் என மிரட்டியுள்ளனர்.

உப தலைவரின் உறவினர் ஊடகவியலாளர் சிவகுமாரனைத் தகாத வார்த்தைகளால் திட்டியதோடு ஊடகத் தொழிலை கொச்சைப்படுத்தி கொலை செய்து விடுவேன் எனவும் மிரட்டியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகவியலாளர் பொலிஸ் முறைப்பாடு செய்துள்ளாரதோடு தான் அங்கம் வகிக்கும் ஊடக அமைப்புகளுக்கும் அறிவித்துள்ளார்.

# ‘புத்திகெட்ட மனிதர் எல்லாம்’ நேற்று தொடக்கம் வெளியீடு

ராஜ் சிவராஜ்ஜின் இயக்கத்தில் மதீசனின் இசையில் உருவாக்கப்பட்டுள்ள ‘புத்திகெட்ட மனிதர் எல்லாம்’ என்கின்ற ஈழத்துத் திரைப்படம் இன்று வெளியாகின்றது.

பல்வேறு குறுந்திரைப் படங்கள், பாடல் காணொலிகள், சமூக விழிப்புணர்வு மற்றும் நகைச்சுவைக் காணொலிகளை இயக்கி விருதுகளை வென்ற சிவராஜ்ஜின் இயக்கத்தில் வெளியாகின்ற முதலாவது முழுநீளத் திரைப்படமாக இது அமைந்துள்ளது.

கலைத்துறையில் சாதிக்க நினைக்கின்ற பல கலைஞர்களை உள்ளீர்த்து முற்றுமுழுதாக நம்மவர் நிலையை வெளியுலகுக்குக் கொண்டுவரும் நிலையில் உருவாக்கப்பட்டுள்ள இந்தத் திரைப் படத்துக்கு மக்கள் ஆதரவை வழங்க வேண்டும் எனத் திரைப்படக் குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

யாழின் முன்னணி திரைக்கூடங்களில் நேற்றும், இன்றும், நாளையும், இந்த திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.

தென்னிந்திய திரைப்படங்களால் நசிவுற்றிருக்கும் ஈழத்து தமிழ்த் திரைத் துறை யிலிருந்து இளைஞர்களின் கடும் உழைப்பால் வெளியாகின்றது இந்தப் ‘புத்திகெட்ட மனிதர் எல்லாம்’ திரைப்படம்.

## பாட்டும் நானே?...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சீன முகத்தோடு போகரின் சிலை ஒன்று தஞ்சைப் பெரிய கோயில் கோபுரத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் சொல்கிறார்கள்.

நம் சீனத்தூதுவ போகரும் எதைத் தயாரிக்க எத்தனை வகை நஞ்சோடு வந்திருக்கிறாரோ? யாரறிவார்?

**உலகநாதரின் ஒப்பீனியன் ★ அப்ப.... இந்தப் போகர் இலங்கையை விட்டுப் போகாரோ? ஹி..ஹி..**

**7. கேள்வி: -** என்னாகப் போகிறது நம் இலங்கை?

**பதில்:-** ஆயிரம்தான் இருந்தாலும் அது என் தாய்நாடு. அதனால் எதுகை அழகு வரும் என்பதற்காக மண்ணாகப் போகிறது அது என்று பதில் சொல்ல எனக்கு விருப்பம் இல்லை.

**உலகநாதரின் ஒப்பீனியன் ★ சொல்லாமல் சொல்வதென்பது இதைத் தானோ?**

**8. கேள்வி:-** தமிழ்த்தலைவர்களை ஒரு பக்கம் அமெரிக்கா அழைக்கிறது. இன்னொரு பக்கம் இந்தியா அழைக்கிறது. சர்வதேச விருந்து மேசையில் ஈழத்தமிழர் பிரச்சினைப் பண்டத்துக்கு அவ்வளவு முக்கியத்துவமா?

**பதில்:-** வீணாகக் கற்பனை சுகம் காணாதீர்கள்! இதுநாள் வரை அந்த விருந்து மேசையில் ஈழத்தமிழர் பிரச்சினை யெனும் பாத்திரம் ஒரு மூலையில் கிடந்தாலும், அதன் தனித்துவம் கெடாமல் இருந்தது. இன்று அது நடுமேசைக்கு வந்திருக்கிறதே தவிர அதன் முக்கியத்துவம் இழக்கப்பட்டு விட்டது. சீனா, அமெரிக்கா, இந்திய பகை என்பது தான் மேசையின் நடுவில் வைக்கப்பட்டிருக்கும் 'மெயின் டிஷ்'. அதற்குத் தொட்டுக்கொள்ளும் 'சைட் டிஷ்' பண்டமாகத்தான் இன்றைய ஈழத் தமிழர் பிரச்சினை மாறியிருக்கிறது. அதனால் நடுமேசைக்கு வந்தாலும் நம் பிரச்சினை இரண்டாம் பட்சமாகி இருக் கிறதுஎனும் உண்மையை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

யார், யாரோ எதையெதையோ நகர்த்தப்போய் நம் பிரச்சினை எனும் பாத்திரம் நடுமேசைக்குத் தானாய் வர, நம் தமிழ்த் தலைவர்களில் சிலர் தாம்தான் அப்பாத்திரத்தை நடுமேசைக்குக் கொண்டு வந்த தாய்ப் 'பீத்திக்' கொள்வதைப் பார்த்தால் சிரிப்பாய் வருகிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் ★ 'மெயின் டிஷ்', 'சைட் டிஷ்' என்பதெல்லாம் கூட வாரிதியாருக்குத் தெரிந்திருப்பது ஆச்சரியம்தான்.**

## மூங்கிலாறு சிறுமி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆகியோர் புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் மூவரையும் நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய பொலிஸார் இவர்களை 48 மணிநேரம் பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்க அனுமதி கோரிய நிலையில், விடயங்களைக் கேட்டறிந்த முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரி. சரவணராஜா இவர்களை 48 மணிநேரம் பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்க அனுமதி வழங்கியுள்ளார்.

கடந்த வாரம் 13 ஆம் திகதி முதல் காணாமல்போயிருந்த நிதர்சனா, கொலை செய்யப்பட்ட நிலையில் 18ஆம் திகதி சடலமாக அவரது வீட்டிலிருந்து சுமார் 400 மீற்றர் தொலைவில் மீட்கப்பட்டிருந்தார்.

கடந்த 13ஆம் திகதி தனது வீட்டிலிருந்து அக்காவின் வீட்டுக்கு செல்வதாகக் கூறி விட்டு புறப்பட்ட நிதர்சனா, பின்னர் காணாமல்போனதாக அவரது குடும்ப உறுப்பினர்கள் 15ஆம் திகதி புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்தனர். ஆனால், இக்கதைகள் அனைத்தும் உருவாக்கப்பட்டதாக ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஆரம்பத்தில் நிதர்சனா கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் அவரது அக்காவின் கணவரைப் பொலிஸார் கைது செய்து விசாரணையை ஆரம்பித்தனர். பின்னர் இந்த கொலை சம்பவம் தொடர்பில் அவரது குடும்ப உறுப்பினர்களான தாய், தந்தை, சகோதரி ஆகியோரை வைத்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட தலைமை பொலிஸ் நிலைய பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையிலான விசேட குழு நடத்திய விசாரணையின் பின்னர், சிறுமியின் கொலை தொடர்பாக அவரது தந்தை பல திடுக்கிடும் உண்மைகளை ஒப்புதல் வாக்குமூலமாக தெரிவித்துள்ளார்.

தனது மகள் நிதர்சனா இரண்டு மாத கர்ப்பிணியாக இருந்ததாகவும், இதனை அறிந்த அவரது தாய் கருவை கலைக்கும் முயற்சியில் கருவை கலைப்பதற்கு சிறுமியை மயக்கமடைய செய்யும் நோக்கில், ஏதோவொரு மருந்து வழங்கப்பட்டதாகவும் அவரது தந்தையின் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டது.

குறித்த சிறுமி கருவைக் கலைக்கும் முயற்சியின்போது அவர் உயிரிழந்திருக்கலாம் என்பது தற்போதைய விசாரணையில் தெரியவந்திருப்பதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், குறித்த சம்பவ இடத்திற்கு நேற்றுமுன்தினம் தடயவியல் பொலிஸார், முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி. சரவணராஜா, கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் எஜ். சமுத்திரஜீவ மற்றும் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கேரத், முல்லைத்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அமரசிங்க, முல்லைத்தீவு சட்ட வைத்திய அதிகாரி, இராணுவத்தினர் போன்ற பலரும் நேரடியாக சென்று சம்பவ இடத்தில் இருந்த பழைய கிணற்றினை பார்வையிட்டதோடு நீண்ட நேரம் நீரில் ஊறிய அடையாளங்கள் நிதர்சனாவின் உடலில் காணப்பட்டதால், குறித்த கிணற்றின் நீரை இறைத்து பரிசோதனை மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன், சிறுமியின் வீட்டிலும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான், சிறுமியின் வீட்டில் இரத்த கறை படிந்திருந்த மேசையினை சான்றுப்பொருளாக மன்றில் சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# அனைத்துப் பாகங்களுக்கும் பாரபட்சமின்றி பகிர்ந்தளிக்கப்படும் சமுர்த்தித் திட்டங்கள்

சமுர்த்தித் திட்டங்களை உச்சபட்சம் பயன்படுத்தி நீர்வேளாண்மையில் ஈடுபடுவதன் மூலம் கடற்றொழில் சார் மக்களுக்கு நிலையான பொருளாதாரத்தை ஏற்படுத்த வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நலிவுற்ற மக்களின் வாழ்கைத் தரத்தை முன்னேற்றுவதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற சமுர்த்தித் திட்டங்கள், பாரபட்சமின்றி நாட்டின் அனைத்துப் பாகங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஊடாக சுமார் ஐம்பது லட்சம் வரையிலான கடன் வசதிகள் உட்பட பல்வேறு நன்மைகளை சமுர்த்திப் பயனாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

அதேபோன்று கிராமிய அபிவிருத்தி வங்கியின் ஊடாக சுமார் 2.5 கோடி வரையிலான கடனைப் பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே, இந்த வாய்ப்புக்களை சரியாகப் பயன்படுத்தி, பருவ கால மீன் வளர்ப்பு, நன்னீர் மீன் வளர்ப்பு, கொடுவா மீன் வளர்ப்பு மற்றும் இறால், நண்டு, கடலட்டை ஆகியவற்றுக்கான பண்ணைகளை அமைத்தல் போன்ற நீர்வேளாண்மையில் முடிந்தளவு ஈடுபடுவதன் மூலம் நிலைபேறான பொருளாதாரக் கட்டமைப்பை எமது மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.

இதன்மூலம் நாட்டுக்கான அந்நியச் செலாவணியையும் பெற்றுக் கொள்ள முடியும். இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் பூரணமான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

தமிழ் வாழ்க

## 22 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

### குடும்பத்தின் குலவிளக்கு!

அப்பா! அப்பா! என்று கதறுகின்றோம் -
உங்கள் செவிதனிற் கேட்கவில்லையா? பாவிகளாய்
இருந்து பரிதவிக்கின்றோம் அப்பா! ஒரு கூண்டில்
வாழ்ந்த எம்மைவிட்டு - எங்கு தான் சென்றீர்கள்
அப்பா!

தலைவனுக்கோர் விழா எடுத்த வேளையில் தமிழ்க்
கொடியவன் தான் - உங்கள் உயிரைப்பறித்தானா?
இல்லை உடலைத்தான் பறித்தான் அப்பா! நான்கு
ரவைகள் தான் - தலையிற் புகுந்தனவோ அந்த
பிஸ்டல் என்னும் கொடிய நஞ்சு அப்பா!

நான்கு செல்வங்களையும் - உங்கள் தெய்வத்தையும்
தவிக்கவிட்டு சென்றமை ஏனப்பா?
நீங்கள் செல்லவில்லை
உங்களைச் செல்ல வைத்துவிட்டார்கள்
தமிழ் அரக்கன்கள் அப்பா!

எந்த விதப் பலனையும் எதிர்பாராமல் இந்த
இனத்துக்காக, தமிழ் மண்ணுக்காக
தமிழ் மொழிக்காக அல்லும் பகலும் பாடுபட்ட ஒரு
தலைவன் நீங்கள் தான் அப்பா! அஞ்சாத நெஞ்சம்,
தன்மானம் உள்ளவரும் எங்கள் குடும்பத்தின் ஒளி
விளக்கு அப்பா!
உப்பைப்போல் எளிமையும் கற்கண்டைப்போல்
இனிமையும் ஆனவர் நீங்கள் அப்பா!

களம் பல கண்டு சிறை பல சென்று
சொல்லொண்ணாத் துன்பம்
அனுபவித்த தியாகி நீங்கள் அப்பா! பல ஆண்டு
காலப் பொது வாழ்விற்கு சொந்தக்காரர் நீங்கள்
அப்பா!

நேற்றுப் பெய்த மழையில்
இன்று முளைத்த காளான்கள் அல்ல
நெருப்பாற்றில் நீந்தி வந்த
மெழுகுவர்த்தித் தீபம் நீங்கள் அப்பா!
நீங்கள் திடீர் அரசியல் வாதியல்ல அப்பா!

தன் குடும்பத்தையும் தன்னையும் கவனியாது
மக்கள் வாழ்வு மலர வேண்டும் - என்பதற்காகத்
தானே பணிகளைச் செய்தீர்கள் அப்பா!
நிராயுத பாணியாய் நின்ற - உங்களைச்
சுட்டது வீரத்தனம் அல்ல இது
கோழைத்தனம் அப்பா! அப்பா!



முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணியின்
யாழ் மாவட்ட செயலாளர் நாயகமும், அனைத்துலக
எம்.ஜி.ஆர் பேரவைத் தலைவரும்,
சமாதான நீதிவானும் ( JP), திருமுருகன் களஞ்சிய
உரிமையாளரும், முன்னாள் வடபிராந்திய மினிபஸ்
சங்கத் தலைவருமாகிய

### அமரர் உயர்திரு.
### பொன்னுத்துரை மதிமுகராஜா

திதி:- ஞாயிற்றுக்கிழமை 26.12.2021

மண்ணில் மலர்வு: பெற்றோர் மகிழ 24.01.1948
விண்ணில் உதிர்வு: மனைவி மக்கள் கதற 26.12.1998

தன் மானம் இல்லாத தமிழ் அரக்கன்
உங்களைச் சுட்ட சந்தர்ப்பத்தில்
கடமை முடியவில்லை அப்பா
காலன் உங்களை அழைத்துவிட்டான் - இல்லை
கணக்கை முடித்து விட்டான் அப்பா! அப்பா!

"தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை"

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"

"நன்மைகள் செய்யத் தாமதம் ஏற்படினும்
அங்கே தீமைகள் நுழைந்துவிடக் கூடாது"
- எம்.ஜி.ஆர்.

"கடல் நீர் ஏன் உப்பானது? கடல் கடந்து
வாழ்கின்ற தமிழர்கள் வடிக்கின்ற கண்ணீரால்"
- பேரறிஞர் அறிஞர் அண்ணா

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். நிகழ்வின் இடைவேளையில்
நல்லூரின் வீதியிலே பேசிக்கொண்டிருந்த அப்பாவுக்கு
மாயமாகவே வந்தது எங்கள் குலவிளக்கின் தலையிலே
நாலுரவைகள் துளைத்ததுவே

பிஸ்டல் என்னும் கொடிய நஞ்ச குருதியிலே தோய்த்தாரே
எங்கள் இதயக்கனி மறைந்தாரோ?

நல்லவர்கள் வாழ்வதில்லை - இது
நானிலத்தின் தீர்ப்பு

அணைந்துவிட்ட எங்கள் குலவிளக்கை இன்னும்
நினைப்போம் என்று வானத்துச் சந்திரனே இவ்
வையகத்தில் உலாவிய என் மாசற்ற அப்பாவை
எப்போ காண்போம்?

உங்கள் ஆத்மா சாந்தியடைய மண்ணிலிருந்து
வணங்குகின்றோம்
உங்கள் பணி தொடரும்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!
நன்றி வணக்கம்

பொன் மதிமுகராஜா விஜயலக்ஸ்மி (மனைவி)
பொன் மதிமுகராஜா விஜயகாந்த்
(தலைவர் அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவை
சமூக சேவை அமைப்பாளர்.
யாழ்ப்பாணம் இலங்கை.
ஸ்ரீமுருக பவனம், தாவடி வடக்கு, கொக்குவில்.

அனைத்துலக சமூகசேவைகள் நற்பணி,
பொதுப்பணி தலைமைச் செயலகம், கே.கே.எஸ்.
வீதி, தாவடிச்சந்தி, யாழ்ப்பாணம், இலங்கை.

வாசகர்களின் நன்மதிப்பைப் பெற்ற பல்சுவை வார இதழ்

74 ஆவது இதழ்

செம்மணி

வெளிவந்துவிட்டது

வாசித்துவிட்டீர்களா?



- ஜோ பைடனுக்குப் பொறுப்பக்கள் அதிகம்
- அடுத்த முதலமைச்சர் தெரிவு மணிவண்ணனா?
- எனது வானூர்திக்குச் சுட்டுக் காலைக் காயப்படுத்திய புலிகள்
- நச்சரிப்புக் காதல் இல்லை
- சிவசின்னங்களில் ஒன்றாகிவிட்டதா ஒலிபெருக்கி...?

மேலும் பல சுவையான அம்சங்களுடன்

உங்கள் பிரதிகளுக்கு அழையுங்கள் 076 443 8622

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.12.2021 இல் வெளியிடப்பெற்றது.